விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : பன்னிரண்டு + 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 04 ஞாயிற்றுக்கிழமை (19.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



## தொட்டில் கயிறு சிக்கியதில் 4 வயது குழந்தை பலி



வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)
வவுனியா அண்ணாநகர் பகுதியில் தொட்டில் கயிறு கழுத்தில் இறுகியதில் 11

## முல்லையில் காணாமல்போன சிறுமி சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - மூங்கிலாறு 200 வீட்டுத்திட்டம் பகுதியில் காணாமல்போயிருந்த சிறுமி நேற்று சடலமாக மீட்கப்பட்டுள் 11

## முறிகண்டி அக்கராயனில் ரயில் மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(முறிகண்டி)
முறிகண்டி அக்கராயன் பகுதியில் புகையிரதம் மோதியதில் 11

'ஒமிக்ரோன்' திரிபால் ஆபத்து இல்லை

# பண்டிகைக் காலத்தில் முடக்கம் இல்லை

சுகாதார அமைச்சர் கெஹலிய



(கொழும்பு)
"ஒமிக்ரோன்" திரிபால் நாட்டுக்கு ஆபத்து இல்லை. கிறிஸ்துமஸ் மற்றும் புதுவருட பண்டிகைக் காலத்தில் நாட்டை மீண்டும் முடக்க வேண்டிய தேவையில்லை என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.
(11ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் காஸ் அடுப்பு வெடித்ததில் சமையல் அறை தீப்பற்றியது

(11ஆம் பக்கம் பார்க்க)

# புதுவருட ஆரம்பத்தில் அமைச்சரவையில் மாற்றம்

- அரச உயர் அதிகாரிகளின் பதவிகளிலும் மாற்றத்துக்கு ஏற்பாடு
- ஜெனிவா கூட்டத்தொடருக்காக ராஜபக்ஷ அரசு புதிய வியூகம்

***(கொழும்பு)* அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள சில அமைச்சுக்களில் மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இதன்போது சில முக்கிய அமைச்சு பொறுப்புகளிலும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக தெரியவருகிறது.

அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை துரிதப்படுத்தவும் புதிய உத்வேகத்துடன் புதிய ஆண்டில் பணிகளை ஆரம்பிக்கவும் அரசாங்கம் எண்ணியுள்ளது.

இதன் காரணமாக இந்த அமைச்சரவை 11

## வல்வெட்டித்துறையில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது

(யாழ்ப்பாணம்)
வல்வெட்டித்துறையில் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துச் சிதறியுள் 11

## கொரோனா 14 பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 14 பேர் உயிரி 11

## வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் சீனாவின் ஊடுருவலை ஏற்க முடியாது



கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)
வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் சீனாவின் ஆதிக்கத்தை முற்றாக நிராகரிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார். 11

## தடுப்பூசி ஏற்றியோருக்கும் ஒமிக்ரோன் தொற்று

சுகாதார அமைச்சு

(கொழும்பு)
கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் மாறுபாட்டால் பாதிக்கப்பட்ட நான்கு நபர்களில் பெரும்பான்மையானவர்கள் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்கள் என்று சுகாதார அமைச்சின் கோவிட்-19 பிரிவின் 11

## 200 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)
இலங்கை முழுவதும் மருந்தகங்களில் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்கு அரச 11

## 24 மணி நேரத்தில் வெடிப்பு சம்பவங்கள்

பெண் ஒருவர் படுகாயம்

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணிநேரத்தில் 24 எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவங்களில் அகலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய பெண் ஒருவர் படுகாய 11

## முல்லையில் முன்னாள் போராளி அடித்துப் படுகொலை

மனைவி உட்பட இருவர் சந்தேகத்தில் கைது

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் அடித்துப் படுகொலை 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (8686)

☎-070 640 5951

e-mail : engchelvam@gmail.com



## கடை வாடகைக்கு

இல.408 A, மானிப்பாய் வீதியில் நீளம் - 37', அகலம் - 20' கடை வாடகைக்கு உண்டு.


தொடர்பு (9132)

077 670 5689


## மரண அறிவித்தல்

### கந்தையா கார்த்திகேசு

( சிவசெல்வம் )



இருபாலை கிழக்கு, கதிர்காம கோவிலடியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளை, காங்கேசன் துறை, பிரான்ஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கார்த்திகேசு அவர்கள் நேற்று முன்தினம் (17.12.2021) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் சிவபதமடைந்தார்.

அன்னார் சிறந்த சிவதொண்டனும் சைவ அன்பரும் பஜனை செய்யும் அன்பருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி கார்த்திகேசு ஜெயலக்சுமி : 0033617301898 (பிரான்ஸ்)

மகன் : 0033648376690 (பிரான்ஸ்) (9131)

தகவல் :-

கதிர்காம கோவிலடி,
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

சுப்பையா ரவீந்திரன்
சகோதரன் (பிரான்ஸ்)

சு. தூயஞானச்செல்வம்
சகோதரன் (இருபாலை)

## மரண அறிவித்தல்

### குகநேசன் சாரங்கன்



மண்ணில் 20.05.2003 விண்ணில் 15.12.2021

கனடா, மொன்றியலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குகநேசன் சாரங்கன் அவர்கள் கடந்த 15.12.2021 (புதன்கிழமை) இறைபதம் அடைந்தார்.

அன்னார் குகநேசன் - வனிதா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் தாரகா, ராதிகா, மகோத்கரன், பார்க்கவி ஆகியோரின் பாச மிகு சகோதரனும் காலஞ்சென்ற கணேசன், குணரட்ணம், குகவதி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும் சைவசிகாமணி (ஓய்வுநிலை எழுதுவினைஞர்), சைவ இறைமணி (ஓய்வுநிலை ஆசிரியர்), சைவக்கலைஞன் (அமரர்), சிவகுமாரன் (தாதிய உத்தியோகத்தர்), திருமாலழகன் (ஆசிரியர் - வலம்புரி), அனுரா (கனடா), கௌசல்யா (ஆசிரியை), வியாசர்மணி, ஜீவிதா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மருமகனும் குணசீலன் (ஜேர்மனி), மிகுந்தலால், லக்ஸ்மணசிறி (பொறியியலாளர்), யசோதை (தாதிய உத்தியோகத்தர்), ரமணன் (கமநலசேவைகள் நிலையம்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(இ)

தகவல்:
குடும்பத்தினர்

# சம்பள உயர்வுகோரி தனியார் துறையினர் வேலை நிறுத்தம்



(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில், தமது சம்பளத்தை உயர்த்தக் கோரி தனியார் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எஸ்குவெல் லங்கா குழுமத்திற்குச் சொந்தமான ஜா-எல ஏகல தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் வருகைப்பதிவு மற்றும் 3,000 ரூபாய் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்த வார ஆரம்பம் முதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். (ம)


## வேலை வாய்ப்பு

கோட் மிசின் மையின்டர், கணனி ரைப்பிங், பைன்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை. (9145)

077 396 5214


# கொரோனா +695

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 695 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையின் மொத்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 579,134 ஆக அதிகரித்துள்ளது. (ம)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - காரைநகர் பிரதான வீதியுடன் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

4 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். வியாபார நிலையங்கள், களஞ்சிய சாலைகள் அமைக்க உகந்த இடம்.

( யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 3 Km தூரம் )

1 பரப்பின் விலை 3 இலட்சம் ரூபாய்

தொடர்பு (9133)

076 890 9259
077 015 0353



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## முதலாம் ஆண்டு நினைவு



அமரர் மதனா ஜெயக்குமார்

(மஞ்சு)

பிறப்பு 1982.08.19 இறப்பு 2020.12.30

ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை உன் நினைவுகள்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
மகனே என்றழைக்க நீ இவ்
உலகில் இல்லையே... (9135)

கலாசாலை வீதி,
பாரதிபுரம், திருநெல்வேலி.

மகன்
ஜெ. டெனிக்ஷன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்வு யோசனைகள்

## இராஜதந்திர ரீதியில் நகர்த்தப்பட வேண்டும்

### முன்னாள் முதலமைச்சர் வரதராஜ பெருமாள்

(கொழும்பு)

**தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்வு யோசனைகள் சிங்கள மக்களை சீண்டுவதாகவோ, மிரட்டுவதாகவோ அமையக் கூடாது என இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.**

இந்த பேச்சுவார்த்தைகள் வரவேற்கத்தக்க மிக முக்கியமான அரசியல் முன்னெடுப்பு என்றாலும் மிகவும் கவனமாக விடயங்கள் கையாளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.



தமிழ் பேசும் கட்சிகளால் எட்டப்படும் ஒருமித்த யோசனைகள், இலங்கைக்கும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்துக்கும் கையளிக்கப்படவுள்ளன.

எனவே பிரிவினை, தீவிரவாதம் ஆகியவற்றை தூண்டாத வகையில் எட்டப்படும் இத்தீர்வு யோசனைகள் குறித்து சிங்கள மக்களுக்கு தெளிவூட்ட வேண்டும் என்றும் வரதராஜப் பெருமாள் கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக ஒற்றையாட்சி முறைமைக்கு விரோதமாக தமிழர் தரப்பால் கருத்துக்கள் பகிரப்பட்டால், அது சிங்கள பௌத்த கடும்போக்காளர்களை குழப்பிவிடும் என வரதராஜப் பெருமாள் சுட்டிக்காட்டினார்.

இருக்கின்ற அரசியல் நிலைமைகளைக் குழப்பிக் கொள்ளாமல், இராஜதந்திர ரீதியில் காய் நகர்த்த வேண்டும்.

இதேவேளை இந்தக் கூட்டணிக்கு வெளியில் நிற்பவர்கள் ஏன் இதனைக் குழப்ப முயற்சி செய்கின்றார்கள் என்றும் வரதராஜப் பெருமாள் கேள்வியெழுப்பினார். (நி)

## நெற்செய்கைக்கு மட்டுமே நட்டஈடு- விவசாய அமைச்சர்

(கொழும்பு)

பெரும்போகத்தில் உரம் இன்றி பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களுள் நெற்செய்கைக்கு மாத்திரமே நட்டஈடு வழங்கப்படும் என விவசாயத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

மேலும் பெரும் போகத்தில் இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய வாய்ப்பு இல்லை எனவும் அடுத்த போகத்திற்கே உரத்தை இறக்குமதி செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## பொருட்களுக்கான விலை உயர்வு சில மாதங்களுக்கு தொடரும்

### கடன் மதிப்பீட்டு நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருட்களுக்கான அதிக விலையுயர்வு போக்கு, அடுத்த சில மாதங்களுக்கு தொடரலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றில் கடந்த மாதம், பொருட்களின் விலையில் பாரிய உயர்வு ஏற்பட்டிருந்தது.

இது கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையில் பொருட்களுக்கு நிலவிய அதிக விலையை பதிவு செய்த காலப் பகுதியாக கருதப்படுகிறது.

எனினும் அது நிலையற்றது என்று இலங்கையின் கடன் மதிப்பீட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பரில் இலங்கையின் பணவீக்கம் சாதனை அளவில் உயர்ந்தது.

இந்த நிலைமை அடுத்த சில மாதங்களிலும் தொடரக்கூடும்

இதனடிப்படையில் இலங்கை அதிக பணவீக்க யுகத்தில் நுழையக்கூடும் என்று கடன் மதிப்பீட்டு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (நி)

## 'திருமுகம் 60' மலர் வெளியீடு







தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், சைவத்தமிழ்ச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் மணிவிழாவை ஒட்டித் 'திருமுகம் 60' மலர் வெளியீடும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கலும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய அறநிதியச் சபையின் ஏற்பாட்டில் ஆலய அன்னபூரணி மண்டபத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள், யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரைகள் வழங்கினார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ எனப்பலர் கலந்து கொண்டனர். விழாவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப் பேராசிரியர். திருமதி.கலாமதி முருகானந்தன் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் ஆகியோர் "இளையதலைமுறை ஆற்றலாளர் விருது-2021" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(படங்கள்-ரவிசாந்)


**மணமகன் தேவை**

1980. யாழிந்து ஸ்வாதி. Doctor யாழ்ப்பாணம் மணமகள் பதிவு இல:6729. No Broker Commission,Register Fees Only www.EQ Marriage Service.com.Ensured Quality Lanka.Bambalapity.

Call 076 664 9401

**வேலையாள் தேவை**

புத்தளம் நகரிற்கு அருகில் உள்ள தோட்டத்தில் தங்கியிருந்து வீட்டையும் சுற்றாடலையும் பராமரிக்கவும், சமைக்கவும் (சைவ உணவும்) பூந்தோட்டம் உருவாக்கி பராமரிக்கவும் ஆண் அல்லது பெண் தேவை. [illegible] தரப்படும். சம்பளம் [illegible]

தொடர்பு- 077 731 9426

**மணமகன் தேவை**

1996. யாழிந்து பூராடம். Quantity Surveyor, கரவெட்டி மணமகள் பதிவு இல. 7019 No Broker Commission, Register Fees Only www.EQ Marriage Service.com.Ensured Quality Lanka.Bambalapity.

Call 076 664 9401


**மணமகன் தேவை**

1996. யாழிந்து அவிட்டம். Nurse யாழ்ப்பாணம் மணமகள் பதிவு இல. 6784. No Broker Commission, Register Fees Only www.EQ Marriage Service.com.Ensured Quality Lanka.Bambalapity.

Call 076 664 9401


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்



எமது ஆலயத்தின் முன்னாள் நித்திய பூசகராக இருந்த

**ப்ரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் சந்தானகோபாலசர்மா**

*( ஓய்வுநிலை புகையிரத நிலைய உத்தியோகத்தர் )*

அவர்கள் கடந்த 16.12.2021 (வியாழக்கிழமை) அன்று இறைபதமடைந்தமையிட்டு துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஓட்டுமடம் வண்ணார்பண்ணை காட்டுத்தறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையாரையும் பகவதி மாரியம்மனையும் கருணாகர வைரவ சுவாமியையும் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல : 07, ஓடை ஒழுங்கை,
ஓட்டுமடம், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

அறங்காவலர்களும் முகாமைத்துவ சபையினரும்
ஓட்டுமடம் வண்ணார்பண்ணை காட்டுத்தறை
அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப்
பிள்ளையார் கோயில்.

(9140)

## நான்காவது அணியாக பிளே ஓஃப் சுற்றுக்குள் நுழைந்தது கொழும்பு ஸ்டார்ஸ்



லங்கா பிறீமியர் லீக் இருபது-20 தொடரின் 20 ஆவது லீக் போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் கொழும்பு ஸ்டார்ஸ் அணி நான்காவது அணியாக பிளே ஓஃப் சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

கொழும்பு-ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், கொழும்பு ஸ்டார்ஸ் அணியும் கண்டி வோரியஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கண்டி வோரியஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய கொழும்பு ஸ்டார்ஸ் அணி, நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 182 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, குசல் பெரேரா 58 ஓட்டங்களையும் சந்திமால் ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கண்டி வோரியஸ் அணியின் பந்துவீச்சில், நிமேஷ் விமுக்தி 3 விக்கெட்டுகளையும் அல்-அமீன் மற்றும் கொலம்பகே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 183 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங் கிய கண்டி வோரியஸ் அணி, 17 ஓவர்கள் நிறைவில் 124 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் கொழும்பு ஸ்டார்ஸ் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரவி பொபாரா 47 ஓட்டங்களை யும் கென்னர் லீவிஸ் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் பந்துவீச்சில், ஜெப்ரி வெண்டர்சே 6 விக்கெட்டுகளையும் சீக்குகே பிரசன்ன 2 விக்கெட்டுகளையும் நவீன் உல் ஹக் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 6 விக்கெட்டுகளை வீழ்த்திய ஜெப்ரி வெண்டர்சே தெரிவு செய்யப்பட்டார்.

(4-6)

# மரண அறிவித்தல்

## பாலகிருஷ்ணர் முத்துக்குமாரு

(யாழ். இந்துக் கல்லூரி, கொழும்பு விவேகானந்தா கல்லூரி, முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னைநாள் கணித ஆசிரியர், சிறந்த நாடக மற்றும் சாரணிய ஆசிரியர்)



**தோற்றம் : 08.05.1946**
**மறைவு : 18.12.2021**

பருத்தித்துறை புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.19 நாயன்மார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணர் முத்துக்குமாரு நேற்று (18.12.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலகிருஷ்ணர் - இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் நேசமலரின் அன்புக் கணவரும் திருமதி அ. நாகேஸ்வரி (U.K), திரு. பா. வைரவநாதன் (ஓய்வுபெற்ற இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்), திருமதி ஞா. கௌரி, திரு. பா. சிவநாதன் (லண்டன்), காலஞ்சென்ற பா. ஆறுமுகநாதன், திருமதி பா. உமாதேவி, திரு. பா. லோகநாதன் (பொது முகாமையாளர் - பனை அபிவிருத்திச் சபை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற Dr. அமிர்தானந்தா, திருமதி பா. சரஸ்வதி,-திரு. ஞானச்சந்திரன், Dr. கலாதேவி, திருமதி பாஸ்க்கரன், திருமதி லோ. கல்பனா, காலஞ்சென்ற சோமசேகரம், திரு. விஜயானந்தம், திரு. லோகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை இல.19, நாயன்மார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(9143)

இல. 19, நாயன்மார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## மனோரஞ்சிதம் தெய்வேந்திரா

சிங்கம் வீதி உடுவில் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோரஞ்சிதம் தெய்வேந்திரா அவர்கள் நேற்று (18.12.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா -சவுந்தரம் தம்பதியரின் மருமகளும் தெய்வேந்திரா அவர்களின் அன்பு மனைவியும் நிதர்சன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், உடுவில்), காலஞ்சென்ற நிர்மலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலினியின் (ஆசிரியை - புங்குடுதீவு மகா வித்தியாலயம்) பாசமிகு மாமியாரும் கேசிகா, கேசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நவரட்ணசிங்கம், குருகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராணிமலர், காலஞ்சென்ற இராயேந்திரா மற்றும் இந்திராணி, காலஞ்சென்ற விமலேந்திரா மற்றும் கைலாயநாயகி, காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(9146)

சிங்கம் வீதி,
உடுவில் மத்தி.

077 644 8762
070 628 0679

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒமிக்ரோனுக்கு எதிராக

# 85% பாதுகாப்பளிக்கிறது

# பூஸ்டர் தடுப்பூசி

(லண்டன்)

**ஒமிக்ரோனால் கடுமையாக நோய்வாய்ப்படுதலில் இருந்து பூஸ்டர் தடுப்பூசிகள் சுமார் 85 வீதம் வரை பாதுகாப்பை வழங்கக்கூடியவை எனக் கருதுவதாக இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

எனினும் முன்னர் பரவிய கொவிட் திரிபுகளை விட ஒமிக்ரோனுக்கு எதிரான தடுப்பூசிகளின் பாதுகாப்பு -செயற்றிறன் சற்று குறைவாக உள்ளது எனவும் வரையறுக்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட மதிப்பீட்டாய்வின் முடிவில் லண்டன் இம்பீரியல் கல்லூரியின் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

விரைவாகப் பரவி வரும் ஒமிக்ரோன் புதிய திரிபு குறித்து முழுமையான அறிவியல் ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. இதன் காரணமாக இந்த வைரஸ் மற்றும் அதற்கெதிரான தடுப்பூசிகளின் செயலற்றிறன் குறித்து நிச்சயமற்ற நிலை இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பயன்பாட்டில் உள்ள தடுப்பூசிகள் அசல் கொரோனா வைரஸுக்கு எதிராக தயாரிக்கப்பட்டவை. ஒமிக்ரோன் திரிபை எதிர்த்து போராட வடிவமைக்கப்படவில்லை. எனவே தற்போதுள்ள தடுப்பூசிகள் ஒமிக்ரோனுக்கு எதிராக முழுமையான பாதுகாப்பை அளிக்கவில்லை.

எனினும் பூஸ்டர் ஒமிக்ரோனை எதிர்த்துப் போராடுவதில் கணிசமாக பங்களிப்பை ஆற்றுகிறது என்பதே எங்களின் மதிப்பீடு. எனவே, அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் போடுவதன் மூலம் ஒமிக்ரோனில் இருந்து பாதுகாப்பு பெற முடியும் எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

டெல்டாவுக்கு எதிராக பூஸ்டர் 97 % பாதுகாப்பை வெளிப்படுத்துகிறது. எனினும் ஒமிக்ரோனுக்கு எதிரான இதன் செயலற்றிறன் 80 முதல் 85.9% வரை இருக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் இங்கிலாந்து உள்ளிட்ட பெரும்பாலான நாடுகள் பூஸ்டர் தடுப்பூசி போடும் செயற்பாடுகளை துரிதப்படுத்தி வருகின்றன. இங்கிலாந்தில் மட்டும் கடந்த வியாழக்கிழமை ஒரே நாளில் 861,306 பேர் பூஸ்டர் 3 ஆவது தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# புதிய பிறழ்வினால் 5ஆவது அலை உருவாகலாம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

இந்தியாவில் நாளாந்தம் ஒமிக்ரோன் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதன் பிரதிபலனாக கடந்த கால நிலவரங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட பகுப்பாய்வின் அடிப்படையில் அடுத்த இரு மாதங்களில் இலங்கையில் ஒமிக்ரோன் பிறழ்வினால் ஐந்தாவது அலை உருவாகக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே இதனைத் தடுப்பதற்கு சுகாதார விதிமுறைகளை கடுமையாக நடைமுறைப்படுத்தி, அது தொடர்பில் தீவிர கண்காணிப்பும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக்குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இலங்கையில் புதிதாக ஒமிக்ரோன் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போது பிரித்தானியாவிலும் தொற்றாளர் எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்து வருகிறது. அந்நாட்டில் பெருமளவானோருக்கு முதலிரு தடுப்பூசிகளும் வழங்கப்பட்டுள்ளதோடு, மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் இரு மாதங்களில் இலங்கையில் ஒமிக்ரோன் பிறழ்வினால் உருவாகக் கூடிய பாரிய அலையை தடுக்கும் விதத்தில் நாம் செயற்பட வேண்டும்.,

தற்போது 5 ஒமிக்ரோன் தொற்றாளர்களே இனங்காணப்பட்டுள்ள போதிலும், அதன் பரவல் வீதம் மிக அதிகம் என்று ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே ஒமிக்ரோன் வைரஸ் குறுகிய காலத்தில் மிக வேகமாகப் பரவக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

சுகாதார விதிமுறைகள் பெயரளவில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படாமல் அவை இறுக்கமாக்கப்பட்டு, அது தொடர்பிலான தீவிர கண்காணிப்புக்களும் முன்னெடுக்கப்பட வேண்டும். இவை முறையாகச் செய்தால் மாத்திரமே ஒமிக்ரோன் பிறழ்விலிருந்து நாட்டை பாதுகாக்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

## மரக்கறிகளின் விலைகள் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் நாட்களில் மரக்கறிகளின் விலைகள் அதிகரிக்கக்கூடும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள முக்கிய பொருளாதார மத்திய நிலையங்களில் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 1000 ரூபா விற்கு விற்பனை செய்யப் பட்டது.

இதற்கிடையில், ஒரு கிலோகிராம் தேசிக்காய் 590 மற்றும் 600 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்ப டுவதாக வும் உள்ளூர் விளை பொருட் களில் ஒன்றான பூசணிக்காய் ஒரு கிலோ 80 முதல் 100 வரை விற்கப் பட்டதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர். (நி)

## பெரிய வெங்காயத்தின் விலை உயர்வு

(கொழும்பு)

பண்டிகைக் காலம் நெருங்கி வரும் நிலையில் சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக சந்தை நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 290 ரூபாய் தொடக்கம் 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய் மற்றும் உருளைக் கிழங்கு ஆகியவற்றின் விலைகள் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் பாரியளவில் அதிகரித்துள்ளது. (நி)

# நாணய நிதியத்திடம் கடன் பெற்றால் ஒரு நிமிடம் கூட அரசுடன் இருக்க மாட்டேன்

## அமைச்சர் வாசு



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றால் ஒரு நிமிடம் கூட அரசாங்கத்தில் இருக்கப் போவதில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் கடனை பெறுவது நாட்டுக்கு சாதகமா என ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் என்பது ஒரு நாட்டுக்கு செய்வதற்கு வழியேதும் இல்லாத [illegible] நாடாக இருந்தாலும் அது பல வீனமாகவே இருக்கும்.

அப்போது சர்வதேச நாணய நிதியத்தின் மற்றும் நாட்டுக்கும் இடையில் ஏதேனும் கொடுக்கல் - வாங்கல் நடந்தால், அது நாணய நிதியத்தின் கொள்கைக்கு அமையவே நடக்கும்.

நாணய நிதியத்தின் முதலாவது கொள்கை அனைத்து அரச வளங்களையும் தேசிய அல்லது சர்வதேச தனியார் நிறுவனங்கள் கொள்வனவு செய்ய இடமளிப்பது. இரண்டாவது நாட்டின் நலன்புரிய நடவடிக்கைகளுக்காக செலவிடும் நிதியை குறைத்தல்.

மூன்றாவது தேசிய உற்பத்திகளை பாதுகாப்பதற்காக அனைத்து இறக்குமதிகளையும் கைவிடல். சர்வதேச நாணய நிதியத்திடம் இவ்வாறு பல நிபந்தனைகள் உள்ளன. இதில் பாரதூரமான நிபந்தனை என்னவெனில் ரூபாயின் பெறுமதியை சாதாரண சந்தையில் தீர்மானிக்கும் வகையில் இடமளிப்பது.

இவை அனைத்தையும் ஒன்றாக எடுத்துக்கொண்டால், அவை நாட்டுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் கெடுதிகள்.

அப்படியானால் மாற்றுவழி என்னவென்று கேட்கலாம். தற்போது எமக்கு இருக்கும் முதலாவது பிரச்சினை டொலர் பற்றாக்குறை.

இதற்கு தீர்வாக நாம் தற்போது நட்பு நாடுகளுடன் மேற்கொண்டு வருவது போல் கைமாற்று உடன்படிக்கைகளை செய்ய வேண்டும்.

டொலர் வருமானம் வரும் வரை இந்த தற்காலிக உடன்படிக்கைகளை செய்ய வேண்டும். கூடிய விரைவில் எமது சுற்றுலாத்துறை முன்னேற்றமடைய வாய்ப்புள்ளது. அப்போது டொலர் வருமானம் கிடைக்கும்.

மறுபுறம் நாம் மாதாந்தம் ஏற்றுமதி செய்யும் பொருட்களின் பெறுமதியானது ஒரு பில்லியன் டொலர்களை தாண்டும். எமது வெளிநாட்டு ஏற்றுமதி படிப்படியாக அதிகரித்து வருகிறது எனவும் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார். (நி)

# அதிவேக நெடுஞ்சாலையில் விபத்துக்கள் ஒருநாளில் 10 வாகனங்கள் சேதம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற மூன்று விபத்துக்களில் 10 வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் தொடங்கொட 34 கிலோமீற்றர் கம்பத்திற்கு அருகில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளதுடன்,

லொறி ஒன்று, 3 சொகுசு பேருந்துகள், 2 ஜீப் வண்டிகள், 4 கார்கள் இவ்விபத்துக்களில் சேதமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலை மாணவர்களுக்கு குறைந்த செலவில் விடுதி

## செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தூரப் பிரதேசங்களிலிருந்து வருகை தரும் மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்பதற்காக பல்கலைக்கழகத்திற்கு முன்பாக ஒரு விடுதி ஒன்றை நிறுவவுள்ளோம் என செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், வேறு பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வரும் மாணவர்கள் எல்லோராலும் கூடிய தொகைப் பணத்தைச் செலுத்தி வாடகைக்கு இருக்க முடியாது.

ஆகவே, குறைந்த செலவில் மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்பதற்காக எங்க ளுக்கு நன்கொடையாக கிடைத்த காணியில் நான்கு மாடிகளைக் கொண்ட விடுதியை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம் என அவர் தெரிவித்தார். (4-5-18)





மஹாராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்களுக்கும் இணுவில் காயத்திரிபீடம், தர்மாசாஸ்தா குருகுல அதிபர் வேதசிவாகம பாஸ்கர சிவஸ்ரீ தானுநாத மஹாதேவ குருக்களுக்கும் தமிழகத்தின் தருமபுரம் ஆதினத்தால் 'சிவாகம கலாநிதி' பட்டம் விருது வழங்கப்பட்டது.

இவ் விருதுக்கான பட்டயமும் தங்கப் பதக்கங்களும் பொற்கிளியும் யாழ். இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெபாஸ்கரனால் அவர்களது இல்லங்களில் வைத்து வழங்கப்பட்டது.

(படங்கள்:சிவசாந்தன்)

# தனிநபரால் காணி அபகரிப்பு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்



(குருமன்காடு)

வவுனியா, பறநாட்டாங்கல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் தனிநபர் ஒருவரால் 500 ஏக்கர் அரச காணி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். கொட்டும் மழைக்கு மத்தியிலும் ஏ9 வீதி பறநாட்டாங்கல் சந்தியில் குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள், பறநாட்டாங்கல் கிராமத்தில் பல குடும்பங்கள் வாழ்வாதாரத்திற்காக விவசாய நிலங்கள் அற்றவர்களாகவும், தொழில் வாய்ப்பு அற்றவர்களாகவும் வாழ்ந்து வரும் நிலையில் எமது கிராமத்தில் தனிநபர் ஒருவர் 500 ஏக்கர் காணியை ஆக்கிரமித்து வைத்துள்ளதுடன், அதனை விற்பனை செய்தும் வருகின் றார்.

எனவே அதனை தடுத்து நிறுத்தி அக் கிராமத்தில் வாழ்வாதாரத்திற்காக காணிகளற்ற மக்களுக்கு அதனை வழங்க அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் ஆகியோர் சென்று, மக்களது கோரிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், குறித்த காணிகளை மீளப் பெற்று அதனை மக்களுக்கு வழங்க நடவடிக்கை ஏற்படுத்த உறுதியளித்த னர். (4-[illegible])

# வீதிகளில் கட்டப்படும் மாடுகள் ஏலத்தில் விடப்படும்

## தவிசாளர் எச்சரிக்கை

(அராலி)

வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளில் கட்டப்படும் மாடுகள் ஏலத்தில் விடப்படும் என வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் த.நடனேந்திரன் தெரிவித்தார்.

சங்கானை - விழிசிட்டி 1ஆம் வீதியில் மாடுகள் தொடர்ந்து கட்டப்படுவதால் வீதியால் பயணம் செய்பவர்கள் பல்வேறு சிரமங்களையும் விபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் நேற்று அப்பகுதிக்கு விஜயம் செய்த பிரதேச சபையின் ஊழியர்கள் நிலைமைகளை பார்வையிட்டு மாடுகளின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடிவிட்டு தவிசாளருக்கு இது தொடர்பாக தெரியப்படுத்தினர்.

அதனைத்தொடர்ந்து தவிசாளர் மேற்கண்டவாறு அறிவித்தல் விடுத்தார். (4-104)

# குடைபிடித்தவாறு மோ.சைக்கிள் ஓட்டியவர் நிலைதடுமாறியதில் விபத்து

## மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மழைக்கு குடை பிடித்தவாறு மோட்டார் சைக்கிளில் ஓடி சென்றவர் நிலை தடுமாறி மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்தனர்.

சாவகச்சேரி பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மழை பெய்துகொண்டு இருந்ததால், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர், குடை பிடித்தவாறு பயணித்துள்ளார். அதன் போது, திடீரென வீசிய காற்றினால் நிலை தடுமாறி எதிரே வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்கு உள்ளானர்.

அதில் எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் அவர்களுடன் மோதி விபத்துக் குள்ளானவருமாக மூவர் காயமடைந்த நிலையில், சாவகச்சேரி மருத்துமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (4-33)

# யாழ்.பாதுகாப்பு படைகளின் புதிய கட்டளைத் தளபதி பதவியேற்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் 27 ஆவது கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் டி.ஜி.எஸ்.செனரத் யாபா நேற்று முன்தினம் பதவியேற்றார். சர்வமத வழிபாடுகளுடன் அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். (4-33)

# சுகாதார உதவியாளர்கள் யாழ்.போதனாவிற்கு தேவை

## பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் சுகாதார உதவியாளர்களாக பணி புரிய தன்னார்வம் கொண்ட தொண்டர்களின் சேவை தேவைப்படுவதாக யாழ். போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

யாழ்.போதனா மருத்துவமனை சூழலுக்கு 5Km. இற்கு உள்ளே வதியும் இளையோர் இச்சேவையை செய்வதற்கு முன்வர முடியும். குறிப்பாக க. பொ. த. உயர்தரப் பரீட்சைமுடித்தவர்கள் தமது பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதத்துடன் யாழ் .போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் அலுவலகத்திடம் தொடர்பு கொள்ள முடியும்.

ஒவ்வொருதன்னார்வத் தொண்டர்களின் சேவை 03 மாதங்களுக்கு பெற்றுக் கொள்ளப்படும்.

அவர்களின் சேவைக் காலநிறைவில் சேவை நிறைவுப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான அமெரிக்காவின் தடையை ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டும்

## புலம்பெயர் அமைப்புக்கள் கூட்டாக கோரிக்கை

(கொழும்பு)

**மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு பயணத்தடை விதிக்கும் அமெரிக்காவின் சமீபத்திய முடிவை சர்வதேச ரீதியில் செயற்பட்டுவரும் 9 புலம்பெயர் தமிழ் அமைப்புகள் வரவேற்றுள்ளன. அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை ஏனைய ஜனநாயக நாடுகளும் பின்பற்ற வேண்டுமென அந்த தமிழ் அமைப்புகள் கோரியுள்ளன.**

சர்வதேச மனித உரிமை தினத்தை குறிக்கும் விதத்தில் 2021 டிசெம்பர் 21 ஆம் திகதி இலங்கையின் இரு இராணுவ அதிகாரிகள் மீது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அமெரிக்கா தடை விதித்துள்ளது.

நம்பகமான சாட்சியங்களின் அடிப்படையில் பாரிய அட்டூழியக் குற்றங்களைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டோர் மீது அமெரிக்கா விதித்துள்ள பயணத் தடையைப் பின்பற்றி ஒத்த எண்ணம் கொண்ட சர்வதேச ஜனநாயக நாடுகள் செயற்பட வேணடும் என நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் எனவும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன் இலங்கைத் தீவில் ஏழு தசாப்தங்களாக இனப்படுகொலை நடந்த போதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அத்துடன், நிரந்தர அரசியல் தீர்வுக்கான கோரிக்கை கண்டுகொள்ளப்படாதுள்ளது என அவ் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

அவுஸ்திரேலிய தமிழர் காங்கிரஸ், பிரித்தானிய தமிழர் பேரவை, தமிழ் மக்கள் பேரவை - பிரான்ஸ் ஐரிஷ் தமிழர்கள் பேரவை, கனேடிய தமிழர் தேசிய அவை, சமாதானம் மற்றும் நீதிக்கான குழு (தென்னா பிரிக்கா), சுவிஸ் தமிழர் பேரவை, இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் இயக்கம், ஐக்கிய அமெரிக்க தமிழர் செயற்பாட்டுக் குழுமம் ஆகிய தமிழ் அமைப்புக்கள் இணைந்து இந்தக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளன. (நி)


# யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான இறுதிச் சந்தர்ப்பம்

மேற்படி எமது சங்கத்தில் அங்கத்தவராகவிருந்து நீண்டகாலமாக செயற்படாதிருக்கும் அங்கத்தவர்களாகிய உங்களை ஏன் சங்க அங்கத்துவத்திலிருந்து நிரந்தரமாக நீக்கக்கூடாது என்பதற்கான நியாயபூர்வமான காரணத்தை குறித்த அங்கத்தவர்கள் நேரடியாக சங்கத் தலைவர்/செயலாளருடன் தொடர்பு கொண்டு 31.12.2021 ஆம் திகதிக்கு முன் விளக்கமளிக்கத் தவறினால் 01.01.2022 ஆம் திகதி முதல் நீங்களாக சங்கத்திலிருந்து விலகியதாக கருதப்படும் என்பதை மேற்படி சங்கத்தின் பொதுச்சபை சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

(C-3282)

இல.183 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

செயலாளர்,
கா.பாஸ்கரன்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1976 கிறிஸ்தவம் NON R.C
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L கடை வியாபாரம்
எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்றுக் கொள்ளப்படும்
தொ.இ: B/12046

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
உயரம்: 5'6"
கி.பா: 53 செவ் 1 சூரி 12 இல்
தகைமை/தொழில்:HND QS
எதிர்பார்ப்பு: படித்த வேலை செய்யும் மணமகள்
தொ.இ: B/12048

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1
கி.பா:9¼ செவ் 4 சூரி 10 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: கலைமாணி புகையிரத நிலைய அதிபர் (SM)
எதிர்பார்ப்பு: தகுந்த தனியார்.அரச உத்தியோகம்
தொ.இ: B/12049

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூராடம் 3
கி.பா: 11 செவ் 4 சூரி 11 இல் உயரம்: 162.5 cm
தகைமை/தொழில்: B.A(Hons) ஆசிரியர்
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண் உத்தியோகம் இருப்பின் நல்லது மணமகன் விவாகரத்தானவர் பிள்ளைகள் இல்லை.
தொ.இ: B/12050

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 17 செவ் 6 சூரி 8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSc, MSc Software Engineer
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ:G/7666

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: 47 செவ் 9 சூரி 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: HND IT
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ:G/9102

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 59¾ செவ் 8 சூரி 9 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: கற்பித்தலில் தேசிய டிப்ளோமா-ஆங்கிலம் ஆங்கில ஆசிரியை
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ:G/12203

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 31¾ செவ் 6 சூரி 10 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MLT
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் கனடா, சுவிஸ். லண்டன்
தொ.இ:G/12205

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500/= ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 360 | 320 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 240 | 150 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 900 | 950 | 950 | 900 |
| தக்காளி | 550 | 440 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 70 | 50 |
| கோவா | 360 | 350 | 450 | 400 |
| கரட் | 300 | 500 | 520 | 600 |
| பூசணி | 60 | 60 | 50 | 80 |
| புடோல் | 320 | 300 | -- | 300 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 200-250 | 300 |
| பெரிய வெங்காயம் | 260 | 200 | 220 | 250 |
| பாகற்காய் | 500 | 400 | 600 | 800 |
| வெண்டிக்காய் | 280 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 160 |
| பயற்றங்காய் | 500 | 350 | 400 | 400 |
| லீக்ஸ் | 340 | 360 | 450 | 450 |
| பீற்றூட் | 250 | -- | -- | 320 |
| கறிமிளகாய் | 600 | 650 | -- | 800 |
| முருங்கைக்காய் | -- | 800 | -- | -- |
| போஞ்சி | 360 | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 320 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | -- | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 180 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 200 | -- | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 30 | 40 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 120 | -- | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

19.12.2021
மார்கழி 04, ஞாயிற்றுக்கிழமை
பூரணை முற்பகல் 10.17 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 5.20 மணிவரை
சுபநேரம் 9.23-10.53 மணிவரை
இராகு காலம் 4.53-6.23 மணிவரை
சந்திராஷ்டமம்- விசாகம், அனுசம்
இரவு நடேசர் ஆருத்திராபிஷேகம் வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**ரிஷபம்** வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றதொரு வகையில் விரயமாகலாம், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், உறவினர் வழியில் மன நிறைவான தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியத்தில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு** பயணங்களால் பலனுண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.

**மீனம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துன்பங்கள் இல்லாமல் ஆதாயங்கள் இல்லை.**

## அரசியல் கைதிகள் விடுதலை

# அமெரிக்காவின் நிலைப்பாடு வெறும் கோரிக்கையாகக் கூடாது

(கொழும்பு)

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு உலக நாடுகள் முன்வர வேண்டும் என்ற அமெரிக்காவின் நிலைப்பாடு வெறும் கோரிக்கையாக அமைந்துவிடக்கூடாது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது.

அதேபோல் சுயநிர்ணய உரிமைக்காகவும், தேச விடுதலைக்காகவும் செயற்படுபவர்களையும் போராடுபவர்களையும் பயங்கரவாத பட்டியலில் சேர்த்து ஒடுக்கும் செயற்பாட்டை அமெரிக்கா உள்ளிட்ட நேச நாடுகள் தவிர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக சர்வதேசத்திற்கு உறுதியளித்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது சர்வதேசத்தை ஏமாற்றும் செயல் மட்டுமல்லாது பயங்கரவாத செயல் என்றும் அவ் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

எனவே பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக இலங்கை சர்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# ஒமிக்ரோன் அச்சுறுத்தலுக்கு மத்தியில் தளர்த்தப்படும் கட்டுப்பாடுகள்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கண்டனம்



(கொழும்பு)

ஒமிக்ரோன் அச்சுறுத்தலுக்கு மத்தியில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமைக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஒமிக்ரோன் அச்சுறுத்தல் காரணமாக உலகம் தற்போது ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் சிக்கியுள்ளது.

அத்தோடு பண்டிகைக் காலம் நெருங்கி வருவதால், மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதில்லை என்பதும் கவலைக்குரிய விடயம் என்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இலங்கையில் கொரோனா நிலைமை இன்னும் கட்டுப்பாட்டு மட்டத்தில் இல்லாத நிலையில் சுகாதார நிபுணர்களின் ஆலோசனையின் அடிப்படையிலா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டது என அவர் கேள்வியெழுப்பினார். (நி)

# எரிபொருள் விலையை உயர்த்தாவிட்டால் அதன் நட்டத்தை அனைத்து மக்களும் செலுத்த நேரிடும்

(கொழும்பு)

எரிபொருட்களுக்கான விலைகள் உயர்த்தப்படாவிட்டால் அதனால் ஏற்படும் நட்டத்தை அனைத்து மக்களும் செலுத்த நேரிடும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஹங்வெல்ல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் மீளவும் எரிபொருட்களுக்கான விலையை உயர்த்த நேரிட்டுள்ளது. கடந்த மே மாதம் எரிபொருட்களின் விலைகள் இறுதியாக உயர்த்தப்பட்டிருந்தன.

அதன் பின்னர் எரிபொருட்களுக்கான விலை 24 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது. இந்நிலையில், எரிபொருட்களின் விலைகளை உயர்த்தாவிட்டால் அதனால் ஏற்படும் நட்டத்தை வாகனம் இல்லாதவர்களும் அதாவது ஒட்டுமொத்த நாட்டு மக்களும் செலுத்த நேரிடும்.

இவ்வாறு செய்வது அனைத்து மக்களுக்கும் செய்யும் அநீதியாகும், உலக சந்தையில் எரிபொருள் அதிகரிப்பு தொடர்பில் திறைசேரி நிவாரணங்களை வழங்காவிட்டால் விலை அதிகரிப்பினை தவிர்க்க முடியாது எனவும் இதன் போது தெரிவித்தார். (நி)

# லிட்ரோ எரிவாயுவை தரையிறக்க அனுமதி



(கொழும்பு)

லிட்ரோ நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு இலங்கை கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் கப்பலில் இருந்து எரிவாயுவை தரையிறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எரிவாயு பரிசோதித்த பின்னர், அதனை தரையிறக்க அனுமதி வழங்கப்பட்டதாக தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா தெரிவித்தார். (நி)

## கொட்டகலையில் எரிவாயு அடுப்புக்கள் வெடிப்பு

(கொட்டகலை)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் இரண்டு பதிவாகியுள்ளது.

குறித்த வெடிப்பு சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. சமைத்துக்கொண்டிருந்த போது அடுப்பு திடீரென் வெடித்து சிதறியுள்ளது.

அடுப்புக்கு பாவிக்கப்பட்டுள்ள லிட்ரோ எரிவாயு சிலிண்டர் பொங்கியிருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமில்லாமல் விதைக்கப்பட்ட விதை பயன்படாதது போல், முயற்சியில்லாத ஊழ்வினையும் பயன்படாது. செய்வினை பூமியாகவும் ஊழ்வினை விதையாகவும் கருதுக. – வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சபையை நெகிழவைத்த யாழ்.ஆயரின் உரை

சிவபூமி அறக்கட்டளை அமைப்பின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் மணிவிழா நேற்றைய தினம் (18) தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் சேவையைப் பாராட்டி சமயத் தலைவர்கள் மற்றும் அறிஞர் பெருமக்கள் உரையாற்றியிருந்தனர்.

அவரின் அளப்பெரும் சேவையை கௌரவித்து திருமுகம் – 60 என்ற மணிவிழா மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதற்கு மேலாக, அந் நிகழ்வில் இளம் ஆற்றலாளர் விருது பேராசிரியர் கலாமதி முருகானந்தன் அவர்களுக்கும் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் அவர்களுக்கும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இவை மணிவிழா நிகழ்வு பற்றிய சிறு குறிப்பு.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் சேவையைப் பாராட்டி உரையாற்றினார்.

யாழ்.மாவட்டத்தில் சைவ – கத்தோலிக்க மக்கள் ஒற்றுமையாக வாழ்கிறார்கள்.

இங்கு சமய பேதம் கிடையாது. நான் செல்கின்ற தேவாலயங்களில் பூசை வழிபாட்டின் பின்னர், நன்றியுரை ஆற்றுபவர்கள் சைவ மக்களின் பெயர்களைக் கூறி, அவர்கள் செய்த உதவிக்கு நன்றி தெரிவிப்பதை அவதானித்துள்ளேன்.

இவ்வாறு சைவ – கத்தோலிக்க மக்கள் இங்கு மிகவும் ஒற்றுமையாக இருக்கின்றனர் எனக் குறித்துரைத்தார்.

இதன்போது, மன்னார் திருக்கேதீச்சரத்து ஆலய நுழைவாயில் வளைவு தொடர்பில் பிரஸ்தாபித்த ஆயர் அவர்கள்; என்னைச் சந்திக்கும் மக்கள், மன்னார் திருக்கேதீச்சர ஆலய நுழைவாயில் வளைவுப் பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள் என்று என்னிடம் கேட்பார்கள்.

ஆனால் அது விடயத்தில் நான் எதுவும் செய்ய முடியாத சூழல் இருக்கிறது. யாழ்ப்பாணம் மறைமாவட்ட எல்லைக்கு அப்பால் மன்னார் மறைமாவட்ட நிர்வாகப் பரப்பு உள்ளது எனக் குறிப்பிட்ட ஆயர், மன்னாரில் சைவ மக்களும் கத்தோலிக்க மக்களும் தனித்தனியாக வாழ்கிறார்கள். இஃது அங்கு ஒற்றுமையீனத்தை ஏற்படுத்துகிறது.

மன்னார் திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவு விடயத்தில், நான் அங்கு இருந்திருப்பின் எனது நடவடிக்கை அவ்வாறாக இருந்திருக்காது எனக் கூறியபோது, சபையில் இருந்தவர்கள் நெகிழ்ந்து போயினர்.

ஆம், மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் நுழைவாயில் வளைவு உடைத்து அழிக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு சம்பவம் என்பது ஆயர் ஆற்றிய உரையின் உட்பொருளாய் இருந்தமை இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

# மட்டு மாவட்ட நீதிபதி மீது தாக்குதல் நடத்தி துணைவியாரின் நகைகள் கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி த.கருணாகரன் மீது தாக்குதல் நடத்திய கொள்ளையன் ஒருவன், அவரது துணைவியார் அணிந்திருந்த 11 பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்டு தப்பித்துள்ளான்.

இச்சம்பவம் அக்கரைப் பற்று பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

வீட்டின் யன்னல் வழியாக உள்நுழைந்த கொள்ளையன், நீதிபதியை தாக்கி நீதிபதியின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி அவரது துணைவியார் அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையிட்டுத் தப்பித்துள்ளான்.

சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(ம)

## தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாடு அரசியலில் சலிப்பை ஏற்படுத்துகின்றது

### மனோ எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கிலும் கிழக்கிலும் மலைநாட்டிலும் செயற்படும் தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாடு தமிழ் அரசியல் பரப்பில் எனக்கு சலிப்பை ஏற்படுத்துகிறது. நீண்ட நாள் இந்த பரப்பில் இருக்க என் மனம் விரும்ப மறுக் கிறது என தமிழ் முற் போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

கட்சியின் பொதுச் செயலாளர் குருசாமி தலைமையில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கொழும்பு பிரைடன் விடுதியில் நடத்திய கட்சி ஒன்றுகூடலில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மனோகணேசனின் பிறந்தநாளான அன்றைய தினம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த பிறந்த நாளில், இதற்குமுன் நான் கடந்து வந்த பிறந்த நாட்களில் தோன்றாத ஒரு விருப்பம் எனக்குள் தோன்றுகிறது.

அடுத்த பிறவியில் நான் இலங்கையிலே ஒரு சிங்களவராக பிறக்க வேண்டும். தென் மாகாணத்தில், சிங்களம் மட்டுமே பேசும் ஒரு கடும் சிங்கள குக்கிராமத்து குடும்பத்தில் பிறக்க வேண்டும் என விரும்புகிறேன். இதற்கான காரணங்களை நான் பகிரங்கமாக கூற விரும்பவில்லை.

ஆனால், இதன் அர்த்தம் எனக்கு தமிழ் மீது வெறுப்பு என்பதல்ல. என் தாய்த்தமிழ் மீது எனக்கு தீராத பற்று இருக்கிறது. நான் மாணவப் பருவத்தில் இருந்து தமிழ் மொழியில் கையெழுத்திடும் தமிழன். தமிழ் திமிர் கொண்ட எனக்கு ஒரு போதும் உடல் களைப்பு ஏற்படுவதில்லை. ஒவ்வொரு பிறந்தநாளின் போதும் எனக்கு வயது குறைவதாகவே, எனக்குள் இளமை ஊஞ்சலாடுவதாகவே உணர்கிறேன்.

ஆனால், சமீப காலமாக, என் மனதில் ஒரு விதமான சலிப்பு ஏற்படுகிறது. வடக்கிலும் கிழக்கிலும் மலைநாட்டிலும் செயற்படும் தமிழ் அரசியல் வாதிகளின் செயற்பாடு தமிழ் அரசியல் பரப்பில் எனக்கு சலிப்பை ஏற்படுத்துகிறது. நீண்ட நாள் இந்த பரப்பில் இருக்க என் மனம் விரும்ப மறுக்கிறது என்றார்.(ம)

## 'பூஸ்டர்' தடுப்பூசி செலுத்தியின் நோய் நிலைமை காணப்படுமாயின் அச்சமடைய வேண்டாம் - சுகாதாரத் தரப்பு

(கொழும்பு)

பூஸ்டர் தடுப்பூசி செலுத்தியதன் பின்னர் நோய் நிலைமை காணப்படுமாயின் அது குறித்து அச்சமடையத் தேவையில்லை என சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு வைத்தியசாலையின் கோவிட் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பாளரான வைத்தியர் ரட்ணசிங்கம் கோபித் இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நோய் அறிகுறிகள் தொடர்ந்து நீடிக்குமாயின் வைத்தியரின் ஆலோசனையை பெறுதல் அவசியமானதெனவும் அவர் குறிப்பிட்டார். (ம)

## முகமாலையில் விபத்து இருவர் படுகாயம்

(முகமாலை)

ஏ 9 வீதியில், பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட முகமாலைப் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.


யாழ். நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரென பளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கயஸ் ரக வாகனத்தில் மோதியுள்ளது.

இதனையடுத்து கயஸ் ரக வாகனத்தின் பின்னே வந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஏ9 வீதியருகே கவிழ்ந்து வீழ்ந்தது.

இவ்வாறு அடுத்தடுத்து இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖"விண்ணிலிருந்து அருளப்படாவிட்டால் எவரும் எதையும் பெற்றுக் கொள்ள முடியாது.

❖'விதைப்பவர் ஒருவர் அறுவடை செய்பவர் வேறு ஒருவர்'

நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது. நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்"

❖"கடவுள் அனுப்பியவரை நம்பவதே கடவுளுக்கேற்ற செயல்"

கடவுள் தரும் உணவு வானிலிருந்து இறங்கி வந்து உலகுக்கு வாழ்வு அளிக்கிறது.

❖வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது.என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன்.

❖"அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம். மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெற வேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம். நானும் இறுதி நாளில் அவர்களை உயிர்த்தெழச் செய்வேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் பார்வை குறைபாட்டுடன் 71 மாணவர்கள் அடையாளம்

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் இல 1 அ.த.க. பாடசாலையில் தரம்-1 தொடக்கம் 6 வரையான 320 மாணவர்களுக்கு மேற்கொண்ட கண் பரிசோதனையில் 71 மாணவர்களுக்கு கண் பார்வை குறைபாடு உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதே மேற்படி விடயம் கண்டறியப்பட்டது. அதிகரித்த தொலைபேசி, தொலைக்காட்சி பாவனையால் பார்வைக் குறைபாடு மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

குறித்த மாணவர்களுக்கு மேலதிக கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கண்ணாடி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். கொரோனாவால் நாடு முழுவதும் பாடசாலை மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் சிறுவர்கள் மத்தியில் தொலைபேசி பாவனை, தொலைக்காட்சி பாவனைகள் அதிகரித்து காணப்பட்டது.

இதனால் பார்வைக் குறைபாட்டு பிரச்சினை சிறுவர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. எனவே பெற்றோர்கள் இது தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(4-316)



மன்னார் இந்து மத பீடமும் கலாநிதி மனோகர குருக்கள் நற்பணி மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்த நாவலர் விழாவும் 199 ஆவது ஜனன தின நிகழ்வும் நேற்று சனிக கிழமை மன்னார் சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-ஜோசப்நயன்)

# பேராறு திட்டத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அமைச்சர் வாசுதேவவிடம் மகஜர் கையளிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா பேராறு நீர்த்தேக்கத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளால் நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயககாரவிடம் நேற்று முன்தினம் மகஜர் கையளிக்கப்பட்டது. வவுனியாவுக்கு பேராறு குடிநீர்த்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக வருகைதந்த நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவை சந்தித்த பத்தினியார்குளம் கமக்காரர் அமைப்பைச் சேர்ந்த விவசாயிகளினாலேயே மேற்படி மகஜர் கையளிக்கப்பட்டது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பேராறு நீர்த்தேக்கத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கடந்த 2013 ஆம் ஆண்டு 165 ஏக்கர் வயற்காணிகளும் 50 ஏக்கர் வரையிலான மேட்டுக்காணிகளும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இந்த திட்டத்திற்காக காணிகளை வழங்க விவசாய அமைப்புகள் கடுமையான எதிர்ப்பை காட்டியமையினால் 2007 ஆம் ஆண்டு முன்மொழியப்பட்ட மேற்படி செயற்றிட்டம் 2013 ஆம் ஆண்டு வரையில் ஆரம்பிக்கப்படாதிருந்தது.

இந்த நிலையில் 2013 ஆம் ஆண்டு முத்தரப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்ட பின்னர் காணிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டிருந்தன.

ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட சில விடயங்கள் அரசாங்கத்தினால் செய்து முடிக்கப்பட்ட போதிலும் மாற்றுக் காணிகளுக்கான காணி அனுமதிப் பத்திரம் வழங்கல், புனரமைக்கப்பட்ட பாசனக்குளங்களுக்கான நீர்வரத்து, வயற்காணிகளுக்கான போக்குவரத்து வசதிகள், பாசன கால்வாய் புனரமைப்பு, பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கான வேலை வாய்ப்பு போன்றன ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் இதுவரை செய்து தரப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டு கடிதம் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. (4-299)

# இயக்கச்சியில் விபத்து தடம்புரண்டது ஹன்டர்



(முறிகண்டி)

கிளிநொச்சி இயக்கச்சிப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை காலை வாகன விபத்தொன்று இடம்பெற்றது.

ஏ-9 வீதியால் யாழ்ப்பாணம் நோக்கி சிறிய ரக வாகனத்தைக் கட்டி இழுத்துக் கொண்டு சென்ற ஹன்டர் வாகனமும் தனியார் பேருந்தும் மோதியதில் ஹன்டர் வாகனம் வீதியில் தடம்புரண்டது.

சம்பவத்தில் பேருந்தும், ஹன்டர் வாகனமும் கடும் சேதங்களுக்கு உள்ளான போதும் தெய்வாதீனமாக உயிரிழப்புக்களோ, காயங்களோ ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தால் மேற்படி பகுதியில் போக்குவரத்து தற்காலிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-18-100-316)

# வேம்பொடுகேணி கிராமத்திற்குள் புகுந்தது வெள்ளம்

## பொதுமக்கள் அசௌகரியம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வேம்பொடுகேணி பிரதேசத்தில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் மக்கள் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

வேம்பொடுகேணி பிரதேசத்திற்கு வேறு பிரதேசங்களில் இருந்து வரும் வெள்ள நீர் தமது கிராமத்தில் தேங்கி நிற்பதாகவும் அந்த நீர் வெளியேற வடிகால் ஒன்று அமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்த போதும் இதுவரையில் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

குறித்த வெள்ள நீர் தேங்கி நிற்பதனால் முதலைகள் வருவதாகவும் தெரிவித்தனர். மேலும் பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

எனவே அதிகாரிகள் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேம்பொடுகேணி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர். (4-316)

# வீதியோர வர்த்தகத்திற்கு அனுமதி தாருங்கள்

## வவு.நகர வியாபாரிகள் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதியில் வீதியோர வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் தமக்கு பண்டிகைக் காலத்தில் வியாபாரம் மேற்கொள்ள அனுமதி வழங்குமாறுகோரி மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் மற்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

வவுனியா பசார் வீதி, இலுப்பையடி, குடியிருப்பு பகுதி உள்ளிட்ட பகுதிகளில் வீதியோர வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக நிரந்தர வர்த்தகர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படுவதாகவும் நகரசபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து வீதியோர வியாபார நடவ்டிக்கைகளுக்கு நகர சபையினரால் தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த வியாபாரிகள் இது தொடர்பில் நகர சபையிடம் பேசியும் எந்த வித தீர்வும் தமக்கு கிடைக்கவில்லை எனவும், தாம் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், தமது வியாபாரம் தடைப்பட்டால் தமது குடும்பம் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் தமக்கு பண்டிகைக் காலத்தில் போக்குவரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் வீதியோர வியாபாரத்தில் ஈடுபட அனுமதி பெற்றுத்தர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.(4-250)



நித்திலம் கலையகத்தினால் உருவாக்கப்பட்ட 'தூவானம்' திரைப்படத்தின் பாடல்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது. மருத்துவர் சி.சிவன்சுதனின் தயாரிப்பில் உருவான குறித்த திரைப்படத்தில் ஈழத்து கலைஞர்களை உள்ளடக்கி படமாக்கப்பட்டுள்ளது. திரைப்படத்திற்கான இசையினை ஈழத்தின் பிரபல இசை அமைப்பாளர் இசைவாணர் கண்ணன் மற்றும் அவரது புதல்வர்களும் இணைந்து உருவாக்கியுள்ளனர். குறித்த திரைப்படத்தின் இசை வெளியீட்டு நிகழ்வில் தமிழர்களின் பாரம்பரிய இசைக்கருவியான யாழ்.இசைக் கருவியை உருவாக்கி மீண்டும் கலைஞர்கள் மத்தியில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. நிகழ்வில் இசைவாணர் [illegible] சுரேஷ், மருத்துவர் சிவன் சுதன், கவிஞர் புதுவை அன்பன், [illegible]ளர்கள், நடிகர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள், திரைப்படத்தினை உருவாக்கியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 பேர்...

முந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14,734 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## வெடித்து...

ளது.

நேற்றைய தினம் மதிய நேர உணவைத் தயாரித்துக் கொண்டிருந்தபோது திடீரென எரிவாயு அடுப்பு வெடித்தது.

சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (ம-104)

## தொட்டில் கயிறு...

நான்கு வயதுப் பெண் குழந்தை ஒன்று நேற்று உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை ஏணையில் விளையாடிக்கொண்டிருந்தபோது தவறுதலாக அதன் கயிறு கழுத்தில் இறுகியதில் குறித்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பரமேஸ்வரன் அருட்சிகா என்ற நான்கு வயதுக் குழந்தையே உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-250,299)

## முல்லையில்...

ளார்.

கடந்த 15ஆம் திகதி புதன்கிழமை முதல் 13 வயதுடைய சிறுமி ஒருவர் காணாமல்போயுள்ளதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் சிறுமியின் வீட்டுக்கு அருகாமையில் உள்ள வளவு ஒன்றில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி பாலியல் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சிறுமி மூங்கிலாறு வடக்கு உடையார்கட்டில் வசிக்கின்றார். திருகோணமலையில் விடுதியில் தங்கி நின்று படிப்பதாகவும் காணாமல்போவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் வீட்டிற்கு வந்ததாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறுமியின் சடலத்தினை அயல் வீட்டார் கோழியினை காணவில்லை எனத் தேடிச்சென்றபோதே அடையாளம் காட்டியுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-316)

## ரயில் மோதியதில்...

குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 6 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி - அக்கராயன் பிரதான வீதியிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

முறிகண்டியிலிருந்து மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கி பயணித்த குறித்த நபர், வீதியில் நின்ற டிப்பர் வாகனத்தை கடந்து புகையிரத கடவையை கடக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது புகையிரதம் அவர் மீது மோதியுள்ளது. இதன்போது குறித்த நபர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரித்துள்ளனர்.

விபத்தில் முழங்காவில் பகுதியைச் சேர்ந்த பி.பத்மசீலன் (வயது - 50) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-100,250)

## மருந்துகளுக்கு...

மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் நிலவும் சிக்கல் நிலை மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இதய நோய், உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய், நீரிழிவு நோய், அழற்சி எதிர்ப்பு மருந்துகள் உட்பட கிட்டத்தட்ட 200 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. (ம)

## வடக்கு, கிழக்கு...

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் "சிதைந்து போகிற தமிழ்த் தேசியமும் சிந்திக்காத தலைமைகளும்" எனும் தலைப்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற கருத்தாய்வு நிகழ்விலேயே இதனைக் கூறினார்.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமை கோட்பாடுகளில் சீனா பின்னிற்பதனாலேயே வடக்கு,கிழக்கில் அதன் தலையீட்டை நிராகரிப்பதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். (ம)

## பண்டிகைக்...

"இலங்கையில் அடையாளம் காணப்பட்ட ஒமிக்ரோன் தொற்றாளர்களில் வெளிநாட்டுப் பிரஜையைத் தவிர ஏனைய இலங்கையர்கள் குணமடைந்துள்ளனர்.

ஒமிக்ரோன் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட வெளிநாட்டுப் பிரஜை சென்ற இடங்கள் தொடர்பான பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும், நாட்டை மீண்டும் முடக்கிவிட வேண்டிய தேவை இல்லை" என்றார்.(ம)

## வவுனியாவில்...

வவுனியா, நெடுங்கேணிப் பகுதியில் காஸ் அடுப்பு வெடித்து சமையலறை தீப்பிடித்து எரிந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, நெடுங்கேணி, சேனைப்புலவு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மாமடு கிராமத்தில் உள்ள வீடு ஒன்றின் சமையலறையில் இருந்த காஸ் அடுப்பு திடீரென வெடித்து தீப்பற்றி எரிந்துள்ளது.

இதனை அவதானித்த வீட்டார் உடனடியாக காஸ் சிலிண்டரை அடுப்பில் இருந்து அகற்றி வீட்டிற்கு வெளியே கொண்டு சென்றதுடன், நீரினை விசிறி தீயினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனால் வீட்டில் உள்ள எவருக்கும் பாதிப்பு ஏற்படாத போதும், சமையலறையில் இருந்த சில பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. (ம-250)

## புதுவருட ஆரம்...

மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எவ்வாறாயினும் மற்றுமொரு அமைச்சரவை மாற்றத்திற்கு பதிலாக அரச உயர் அதிகாரிகள் பதவிகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்ற யோசனையும் அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஐ.நா கூட்டத்தொடருக்காகவே ராஜபக்ஷ அரசு இப் புதிய வியூகத்தை வகுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## தடுப்...

தலைமை ஒருங்கிணைப்பாளர், மருத்துவ தொழில்நுட்ப சேவைகளின் பணிப்பாளர் டாக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார். (ம)

## 24...

மடைந்துள்ளார்.

அவரின் வீட்டில் இருந்த எரிவாயு அடுப்பு வெடித்ததில் அவரது இரண்டு கால்களிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டதுடன் குறித்த பெண் தற்போது மத்துகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

காலி, பண்டாரவளை, கொட்டகலை, மட்டக்களப்பு மற்றும் அம்பலாந்தோட்டை உட்பட நாடு முழுவதிலும் இதேபோன்ற எரிவாயு தொடர்பான விபத்துக்கள் பதிவாகியுள்ளன. (ம)

## முல்லையில் முன்...

செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதோடு நேற்றைய தினம் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியபோது தாம் கொலை செய்ததாக உயிரிழந்தவரின் மனைவி ஒப்புக்கொண்டுள்ளார்.

கடந்த வாரம் வீட்டிலிருந்து வெளியில் சென்றிருந்த குறித்த நபர் வீதியோரம் அமர்ந்திருந்த நிலையில் பிரதேச மக்கள் சிலரால் அழைத்து வரப்பட்டு வீட்டில் விடப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அவர் மரணித்ததோடு திடீரென மரணம் நிகழ்ந்ததாக அவரது மனைவி அறிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மரணம் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது.

இந்நிலையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தாம் அவரை அடித்துக் கொலை செய்ததாக மனைவி ஒப்புக் கொண்டுள்ளதோடு தமக்கு மற்றுமொரு நபரும் உதவியதாக தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளதோடு மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-100)

### தன நிதானய

திகதி - 2021.12.18
சீட்டிழுப்பு இலக்கம் - 650
X 15 45 56 73

### கொவிசெத

சீட்டிழுப்பு திகதி 18.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2915
R 10 17 39 62

### மஹஜன சம்பத

திகதி 2021/12/18
சீட்டிழுப்பு இலக்கம் 4620
E 3 0 4 6 8 3

### மெகா பவர்

திகதி 18/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0968
T 25 04 06 25 77

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 18/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1184
மேஷம் 4 4 3 8 6 9

### அத கோடிபதி

கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1423
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 18.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,004,840
வெற்றி இலக்கங்கள் 17 21 53 70 U

### சனிதா

கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3758
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 18.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,891,200
வெற்றி இலக்கங்கள் 35 52 54 60 Y

### SUPER BALL

Draw Number சீட்டிழுப்பு வாரம் 1597
Colour நிறம் நீலம்
Full Draw Date சீட்டிழுப்பு திகதி 2021/12/18
Week Days Name தினம் சனி
O 20 34 38 70
Next jackpot அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 50,109,869/-

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 111
சீட்டிழுப்பு திகதி 18.12.2021
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 20 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,033,360/-

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ.2,207,776/-
Draw Date திகதி 2021/12/18
Draw Number வெற்றி வாரம் 3309
Colour வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 20 35 52 59
விருச்சிகம்
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,357,320/-

### சம்வர்தன வாசனாவ

திகதி: 2021-12-18
வெற்றி வாரம்: 469 | வர்ணம்: சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 11,799,584/-
P 15 25 69 1
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,536,260/-
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 11,877,580/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னந்தோட்டம் உடனடி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் A9 வீதியில் இருந்து 1 Km தூரத்தில் 453 1/2 பரப்பு விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
(தரகர் தேவையில்லை)
(9097)

**077 232 0176**
**077 239 0780**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கணக்கர் வளவு 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(நிலப்பரப்பு)
14 அடிப் பாதையுடன்
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்
**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(9130)
தொடர்புகளுக்கு
**077 814 7389, 070 705 1655**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் கிப்ற் (Gift) சென்ரருக்கு
❖ முகாமையாளர் (ஆண்கள்)
அனுபவம் உள்ளவர்கள்/ அனுபவம் இல்லாதவர்கள்.
❖ விற்பனையாளர்கள் (பெண்கள்)
அனுபவம் உள்ளவர்கள்/ அனுபவம் இல்லாதவர்கள்.
யாழ். நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

**077 493 9799**
**077 210 5286**
(9138)

## மணமக்கள் தேவை

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயதான அவுஸ்திரேலியா PR உடைய அழகிய மணமகனுக்கு (தற்போது யாழ். வந்துள்ள) ஓரளவு படித்த நற்குணமுள்ள குடும்பப்பாங்கான மணமகள் தேவை. (USA, லண்டன், சுவிஸ், பிரான்ஸ், இத்தாலி, சுவிஸ்லாந்து, ஜேர்மன், கொலன்ஸ், நியூசுலாந்து, கனடா PR உள்ள மணமகள்)

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியா PR உடைய 1978 இல் பிறந்த கார்த்திகை 2 ஆம் பாதம், கி.பா 33, 8 இல் செவ்வாய் உடைய Super Market உரிமையாளர் மணமகனுக்கு ஓரளவு படித்த நற்குணமுள்ள குடும்பப்பாங்கான மணமகள் தேவை. மணமகன் மிக விரைவில் யாழ். வரவுள்ளார். (9141)

**VIMB, வங்களாவடி, வேலணை.**
**077 522 1132/076 281 2188**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மேல்மாடிக் கட்டடத்துடன் காணி விற்பனைக்கு

யாழ். நகரில் மிகப் பிரபல்யமான அமைவிடத்தில் 7 பரப்புக் காணி மேல்மாடிக் கட்டடத்துடன் விற்பனைக்கு உண்டு.
தனியார் வங்கி மற்றும் நிறுவனங்களுக்கு மிகப் பொருத்தமானது. (9114)

**VIMB, வங்களாவடி, வேலணை.**
**077 522 1132**
**077 493 4336**
**074 174 6175**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, 1987 இல் பிறந்த மிருகசீரிடம், 04 ஆம் பாதம், சூரியன் செவ்வாய் 3 இல், கிரகபாவம் 6, அரச தொழில் புரியும் மணமகனிற்கு மணமகள் தேவை.
(9136)
தொடர்பு
**077 616 1739**

## விற்பனைக்கு

HONDA BENLY 125 (122-)
HONDA CM 250 (Unregistered)
YAMAHA YB1 (Unregistered) (9137)

**077 899 6552**
**077 899 9083**

## காணி தேவை

யாழ். உரும்பிராய், ஊரெழு மற்றும் இராஜ வீதியில் 1 1/2, 2 பரப்பளவான காணி தேவை. (ஏனைய இடங்களும் விரும்பத்தக்கது) உரிமையாளர் தொடர்பு கொள்வது விரும்பத்தக்கது.

**077 400 1836** (9127)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS** (C-3237)

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 20'000/-**
பயிற்சியின்போது - 15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

- வவுனியா நகரப் பகுதியின் மிகப் பிரபல்யமான இடத்தில் 6 பரப்புக் காணியில் நல்ல நிலையில் வீடு
- யாழ். ஸ்ரான்லி வீதியில் 1 1/2 பரப்புக் காணி (அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அமைக்க உகந்தது) உடன் விற்பனைக்கு

(9142)

**VIMB, வங்களாவடி, வேலணை.**
**077 522 1132, 077 493 4336**
**076 281 2188**

## வீடு வாடகைக்கு

தாவடிச் சந்தியில் வீடு வாடகைக்கு உண்டு. (9112)

**077 522 2533**
**077 020 4276**

## மரண அறிவித்தல்

தோற்றம்
25 - 09 - 1948



மறைவு
18 - 12 - 2021

### புவனேஸ்வரி சோமசுந்தரம்

சண்டிலிப்பாய் மேற்கு சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி சோமசுந்தரம் நேற்று (18.12.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற குகதாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அன்பழகன், கவிதா, நந்தினி, குமுதினி ஆகியோரின் அன்புத் தாயாரும் பார்த்தீபன், குணசீலன், சசிகரன், ரஜீனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மோகனா, கஜீபன், பிருத்திகா, பிரியங்கி, தஸ்மிதா, திபிசன், பவிசன், கிஷானி, அஸ்வினி, அஸ்விகன், அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-3303)

தகவல் :-
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.
077 435 6117

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3215)
0768226240 DHL

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (18.12.2021) சனிக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் (வடமாகாணம்) நடத்தப்பட்ட பண்பாட்டு பெருவிழா - 2021 இல் **கலைக்குரிசில்** விருது பெற்ற நாராயணா கலைக் கழகத்தின் தலைவர்

**க.வே. சிவகுமாரன் B.A (கலைஞானச்சுடர்)**

அவர்களை மனமுகந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
நாராயணா கலைக் கழகம்
கோண்டாவில், யாழ்ப்பாணம்.
(9139)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 323

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 19.12.2021 தொலைபேசி : 021 222 3378

## பேரவைக்கு அகவை 6





## நல்லூர் மன்னனை வணங்கும் சீனர்கள்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம்' என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

சண் அங்கிள் என்று எழுத்துலகில் அறியப்பட்ட சண்முகநாதன் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம்.

சுன்னாகத்தைச் சேர்ந்த சண்முகநாதன் அவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.

யாழ்ப்பாண மாநகர சபையின்ர வரவு- செலவுத் திட்டம் நிறைவேறியிருக்குது.

மாநகர சபையின்ர பட்ஜெட் நிறைவேறுவதற்கு மூலகாரணம், அதனை எதிர்த்தால் மக்கள் கடும் கோபமடைவினம் என்பதுதான்.

கங்காணி: அப்படி இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு- செலவுத் திட்டத்தை எதிர்த்துத்தானே வாக்களித்திருக்குது.

விதானையார்: அதுதானே கூட்டமைப்பு கஷ்டப்படுகுது.

மூப்பர்: என்ன விதானையார் சொல்லுறியள்.

விதானையார்: இஞ்சே மூப்பர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால தமிழ் மக்களின்ர மனநிலையைப் புரிந்து கொள்ள முடியாது என்பதுதான் உண்மை.

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து தங்கட செல்வாக்கைக் கணிசமாகக் குறைச்சினம்.

இப்ப யாழ். மாநகர சபை முதல்வர் மணிவண்ணனை அந்தப் பதவியில இருந்து இறக்க வேணும் எண்ட ஒரே நோக்கத்தோட மாநகர சபையின்ர பட்ஜெட்டைத் தோற்கடிக்கவேணும் என்பதில உறுதியாக இருந்தினம்.

அதால தமிழ் மக்களின்ர எதிர்ப்புக்கு அவையள் ஆளாகியிருக்கினம் என்பதுதான் உண்மை.

சாத்திரியார்: யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனின்ர வேலைத் திட்டங்களால மணிவண்ணன்மீது யாழ்ப்பாண மாநகர மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கினம். அதிலும் ஆரியகுளப் புனரமைப்பும் யாழ். நகரத்தில தேங்குகிற மழை நீரை ஒரு கணப்பொழுதில வெளியேற்றி யாழ். நகர வர்த்தகர்களுக்கு பெரும் உதவி செய்ததாலும் மணிவண்ணனின்ர சேவையை மக்கள் வரவேற்கினம்.

இந்த நிலையில மணிவண்ணனை முதல்வர் பதவியில இருந்து இறக்கிறதை எங்கட சனங்கள் விரும்பாயினம்.

ஆனால் இந்த யதார்த்தத்தைத் தெரியாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பட்ஜெட்டை எதிர்த்து வாக்களித்திருக்குது. இதைத்தான் ஊதிக் கெடுத்த கதை எண்டு சொல்லுறது.

மூப்பர்: என்ன இருந்தாலும் கூட்டமைப் பின்ர உறுப்பினர்கள் சிலர் பட்ஜெட்டை ஆதரிக்க வேணும் எண்டு தங்கட கட்சித் தலைமைக்கு எடுத்துக் கூறியிருக்கினம். அதுமட்டுமல்ல முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் பட்ஜெட்டை ஆதரித்து வாக்களிக்கத்தான் நிலை எண்ட கருத்தை முன் வைத்திருக்கிறார். ஆனால் அவை எதுவும் கூட்டமைப்பின்ர செவிகளில ஏறவில்லை.

சாத்திரியார்: துன்பத்தைக் கட்டிச் சுமக்கப் பிறந்தவனுக்கு சொன்னாலும் கேட்பானோ ஞானப் பெண்ணே எண்ட மாதிரி, கெடுகிற காலத்தில நல்ல செய்திகள் கெடுதியாகத் தான் தெரியும். இருந்தாலும் கூட்டமைப்பின்ர உறுப்பினர்கள் சிலர் பட்ஜெட்டை எதிர்ப்பதாகச் சபையில கூறும் போது ஒலிவாங்கியை நிறுத்தினவியளாம்.

வாத்தியார்: ஓ! யாழ். மாநகர சபை நடவடிக்கை நேரடியாக ஒலிபரப்பப்படுகுதல்லோ. இந்த நிலையில பட்ஜெட்டை எதிர்ப்பதாக உரத்த குரலில கூறினால் அது மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தும் என்பதால மைக்கை ஓவ் செய்து விட்டு அறிவிக்கிறதும் நல்லதுதானே.

பண்டிதர்: அசுவத்தாமா இறந்தது மெய்யே என்று உரத்தும் யானை என்று மெல்லிதாகவும் கூறுகிற நுட்பம்தான் அது.

அதுசரி சீனத்தூதுவர் தலைமையில யாழ்ப்பாணம் வந்த தூதுக்குழுவினர் நல்லூர்க் கந்தனிட்டப் போய்த் தரிசித்தவியளல்லோ.

விதானையார்: உண்மையில சீனத்தூதுவர்கள் வேட்டி கட்டியிருந்தது அழகாகத்தான் இருந்தது. அதிலும் இந்திய வேட்டிகளை சீனத் தூதுவர்கள் கட்டியிருந்த அழகு இன்னும் ஒருபடி மேல்.

மூப்பர்: என்ன விதானையார் சொல்லுறியள்.

விதானையார்: சீனாவும் இந்தியாவும் ஒற்றுமையாக ஒன்றுபட்டிருந்தால் அது மிகப் பெரிய அழகை, அமைதியை, சாந்தியைத் தரும் எண்ட தத்துவத்தைத் தான் நல்லூர் முருகன் உணர்த்தியிருக்கிறான்.

பண்டிதர்: உண்மைதான். சீனத் தூதுவர்கள் சைவத்தமிழ்ப் பண்பாட்டின்படி வேட்டி அணிந்து மேலாடையின்றி அர்ச்சனைத் தட்டங்களைப் பயபக்தியோட கையில ஏந்தி நல்லூர் முருகனைத் தரிசிக்கச் சென்ற காட்சி உண்மையிலேயே பக்தி அழகைக் காட்டியிருந்தது.

பண்டிதர்: எங்கட தமிழ் மன்னன் நல்லூர் முருகன்தானே. அவன் நல்லூர் இராசதானியில் இருந்து அரசாட்சி செய்கிறான். அவனைச் சந்திக்க வாற உள்நாட்டு, வெளிநாட்டுத் தலைவர்கள் அவன்ர அரண்மனைக்குள்ள போறது எண்டால் அதுக்குரிய நிபந்தனையோடதான் போகவேணும்.

யார் என்ன சொன்னாலும் நல்லூர்க்கந்தன்ர தலைமையில தமிழர் ஆட்சி இந்த நாட்டில நடந்து கொண்டுதான் இருக்குது.

இவ்வாறு வாத்தியார் வைத்திலிங்கம் கூற, அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## தமிழ் மன்னனை வணங்கிய சீனத் தூதுக்குழுவினர்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழி தீர்க்கும் அரசியலை குழி தோண்டிப் புதையுங்கள்

**“கட்சி பேதம் மறந்து எவர் நல்ல திட்டங்களைச் செய்கிறாரோ அவரை ஆதரித்து அவருக்கு ஊக்கம் கொடுப்பதே அறம். இதையே மக்கள் விரும்புவர். ஆனால் இங்கோ நடந்தது வேறாய் அமைந்திருக்கிறது.”**



இந்த நண்டுகள் இருக்கின்றனவே அவை மிக இலகுவில் இறந்து விடாது. நீரின்றி நிலத்திலும் வாழக்கூடிய தன்மை கொண்டவை இவை.

ஒரு அருங்காட்சியகத்தில் பல நாடுகளுக்குரித்தான நண்டு வகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ஒவ்வொரு நாட்டு நண்டுகளும் ஒவ்வொரு குவளையில் இட்டு வைக்கப்பட்டிருந்தன.

அரியவகை நண்டுகளைப் பார்க்க பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் குறித்த அருங்காட்சியகத்திற்கு குவிந்த வண்ணம் இருந்தனர்.

அங்கு யாருமே அவதானிக்காத ஒரு விடயத்தை நம்மாள் ஒருவர் அவதானித்துவிட்டார்.

உடனடியாகக் குறித்த நிகழ்வின் ஏற்பாட்டாளரிடம் சென்ற அவர், அனைத்து நாட்டு நண்டுகளையும் காட்சிப்படுத்தியுள்ளீர்கள். மிகவும் சிறந்த விடயம்.

நண்டுகள் இருக்கும் அனைத்துக் குவளைகளும் அடைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இலங்கைக்கே உரித்தான அதிலும் வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நண்டுகள் உள்ள குவளையை அடைக்கவே இல்லை. அவையும் வெளியேறாமல் இருக்கின்றனவே எப்படி? என்றார்.

அதற்கு அந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர் கூறினார். ஓ... அதுவா? அவை தமிழ் நண்டுகள் என.

நம்மாளுக்குப் புரியவில்லை. வெலவெலத்துப்போய் நிற்க, அவர் விளக்கமாகக் கூறினார்.

ஐயா, மற்றைய நாட்டு நண்டுகள் மிகவும் ஒற்றுமையானவை. திறந்துவிட்டால் வெளியேறிவிடும்.

ஆனால் தமிழ் நண்டுகளிடம் ஒற்றுமைஎன்பது இம்மியும் இல்லை. ஒரு நண்டு ஏறினால் மற்றைய நண்டு பிடித்து இழுத்து வீழ்த்திவிடும்.

அதேபோல வேறொரு நண்டு ஏறினால் இன்னொரு நண்டு இழுத்து வீழ்த்திவிடும்.

இவ்வாறு ஒரு நண்டுகூட வெளியேற விடவே விடாது. ஒற்றுமையாகச் செயற்படவும் மாட்டாது.

எனவேதான் தமிழ் நண்டுகள் உள்ள குவளையை மட்டும் திறந்திருக்கின்றோம். ஓடிவிடும் என்ற பயம் எமக்கு இல்லை என்றார் சிரித்தபடி. நம்மவர் எதுவும் பேசாமல் நடையைக் கட்டினார்.

அட, எதற்கிந்த நண்டுக்கதை என நீங்கள் என்னைப் பார்த்து முறைப்பது புரிகிறது. சொல்கிறேன்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் மாநகர சபையின் பாதீடு தொடர்பான வாக்கெடுப்பு நடைபெற்றது அல்லவா? அதற்காகத்தான் இந்த நண்டுக் கதையைச் சொன்னேன்.

முதல்வர் மணிவண்ணன் தலைமையில் மாநகர அமர்வு ஆரம்பமானது. பகிரங்க வாக்கெடுப்பு எனவும் அந்நிகழ்வு நேரடி ஒளிபரப்பாக சில ஊடகங்களில் ஒலிபரப்பப்பட்டதும் குறித்த விடயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தி நின்றன.

பாதீடு நிறைவேற்றப்படுமா? என்றகேள்வி கடந்த பல நாட்களாகவே மக்கள் மத்தியில் எழுந்தஒரு விடயமாக இருந்ததும் அதற்கு ஒரு காரணமாக இருந்தது.

ஏனெனில் மணிவண்ணன் யாழ். மாநகர முதல்வராகப் பொறுப்பேற்ற காலம்முதல் அவர் மிகவும் திறம்பட மாநகர சபையை வழிநடத்தினார் என்பதை மக்கள் மிகவும் கரிசனையோடு பார்த்தனர்.

ஒரு மாநகரத்திற்கு எவை முக்கியமானது என்பதை நாடி பிடித்துப் பார்த்த மணிவண்ணன் அந்தக்குறைகளை நிறை செய்ய முற்பட்டார்.

அதன்முதற்கட்டமே யாழ். நகர மத்தியில் இருந்த கழிவுநீர் கால்வாய்களைச் சுத்தம் செய்யும் திட்டம். அந்த அரியபணியில் மணிவண்ணனும் அவரது குழுவினரும் மிகவும் அர்ப்பணிப்போடு செயற்பட்டனர் என்பதை அவர்களின் உழைப்பு எடுத்தியம்பியது.

தோண்டத் தோண்டப் பெருவாரியான பிளாஸ்டிக் போத்தல்கள் வந்து கொண்டேயிருந்தன. அவை மலையளவாய் உயர்ந்து கிடந்தமை அதற்குச் சாட்சி. அடுத்து யாழ். நகர மத்தியில் உள்ள குளங்களைத் தூர்வாரும் செயற்பாடு.

அதற்கு யாழ். வர்த்தகர்களின் உதவியுடன் மிகவும் வேகமாகத் தூர்வாரும் செயற்பாட்டை முன்னெடுத்துச் சென்றார் மணிவண்ணன். அதன்விளைவு தொட்டவுடன் வீதியில் எகிறும் மழை வெள்ளம் இரண்டே மணித்தியாலங்களில் வழிந்தோடியமை கண்டு வர்த்தகரும் மக்களும் வியந்து நின்றனர்.

அதன்பின் முதல்வர் மணிவண்ணன் யாழ். ஆரியகுளத்தைப் புனரமைத்து அதை ஒரு பொழுது போக்கு இடமாக ஆக்கிக் காட்டியதுடன் ஆரியர் வருகையையும் ஆரியகுளம் யாரால் கட்டுவிக்கப்பட்டது என்பதையும் கல்வெட்டாய் மும்மொழிகளிலும் பதித்துச் சாதனை செய்தார்.

ஆரியகுளத்தடி பறிபோகும் நிலையில் இருந்தவேளை ஆரியர் பரம்பரை தொடர்பில் கல்வெட்டு, அதுவும் சிங்கள மொழியிலேயே வைப்பதற்கு உண்மையில் துணிச்சல் வேண்டும். உண்மை யைச் சொல்வதற்கு யாருக்குப் பயப்பட வேண்டும்?

இவ்விடயங்கள் அனைத்திலும் மணிவண்ணன் களத்தில் நின்று செயற்பட்டமை மக்கள் மத்தியில் அவருக்குத் தனி இடத்தை பெற்றுக் கொடுத்தது.

அரசியல் என்பது மக்கள் பணி செய்வதே. அதை எவர் செய்தாலும் மக்கள் அவர்களை நல்ல இடத்தில் வைத்துப் பார்ப்பார்கள்.

ஆனாலும் யாழ். மாநகர சபையில் நடந்தது மிகவும் முகம் சுழிக்கத்தக்க செயல்.

நடந்த வாக்கெடுப்பில் மணிவண்ணனுக்கு எதிராக 21 வாக்கு களும் ஆதரவாக 24 வாக்குகள் அமைந்தன. மேலதிக 3 வாக்குக ளால் யாழ். மாநகர சபை பாதீடு வெற்றி பெற்றது.

இதில் ஏலவே யாழ். மாநகர சபையை ஆட்சிசெய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் 16 பேரும் மணிவண்ணனின் பாதீட்டை எதிர்த்து வாக்களித்தனர் என்பதை இங்கு சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

மிகவும் பலம்வாய்ந்த நிலையில் தாம் ஆட்சி செய்தபோது இவ்வாறு மிகத்தீவிரமாக மக்களுக்கு நல்ல திட்டங்களை முன்வைத்திருந்தால் தங்கள் ஆட்சி கவிழ்ந்திருக்காது என்ற யதார்த்தத்தை மறந்து கூட்டமைப்பினர் பழிதீர்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தமை மிகவும் வெட்கப்படவேண்டிய ஒன்றே.

அதிலும் கட்சி உறுப்பினர்கள் கட்சித் தலைமையின் பேச்சிற்கு தலையாட்டி பொம்மைகளாய் செயற்பட்டமை என்பது அடுத்த தேர்தலில் ஆசனம் பெறுவதற்கானதென்பதை மக்கள் நன்கு உணர்ந்துவிட்டனர்.

இதில் வெறுமனே பழிதீர்க்கும் படலம் ஒன்று மிகவும் தீவிரமாக நகர்த்தப்பட்டிருந்தாலும் மக்கள் மணிவண்ணனை விரும்புகின்றனர் என்பதை ஏனோ அவர்கள் மறந்து விட்டனர்.

மணிவண்ணனுக்கு ஆதரவாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வாக்களித்திருந்ததுடன் மணிவண்ணனின் திட்டங்கள் மக்களுக்கு நன்மை பயப்பனவாக இருந்தன. அவரின் ஆட்சி தொடர வேண்டும் என நாம் விரும்பினோம் என தன்னிலை விளக்கம் ஒன்றை வழங்கியிருந்தனர்.

ஆனால் மணிவண்ணனுக்கு எதிராக வாக்களித்தவர்கள் மக்கள் நலன்சார்ந்து சிந்திக்காமல் வெறுமனே கட்சி சார்ந்த, தமது அரசியல் நோக்கம் சார்ந்த குறுகிய வட்டத்தில் நிற்கின்றனர் என்பது புலனாகிறது.

குவளையை மூடாது விட்டிருந்த தமிழ் நண்டுகள் போல குழி பறிக்கும் அரசியலை கைவிடும் வரை தமிழினத்திற்கு மீட்சி இராது.

சரி, எதிர்த்தவர்கள் அடுத்த முறை மாநகர சபை உறுப்பினராய் தெரிவு செய்யப்படுகிறார்களா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை ஆறில் தமிழ் மக்கள் பேரவை



2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ்மக்களின் எதிர்காலம் எப்படியாகும் என்ற ஏக்கம் தமிழ்ப் பற்றாளர்களிடம் ஏற்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கட்டமைப்பை இழந்திருந்ததோடு போருக்குப் பின்பான அதன் வழிப்பாதை மாற்றம் பெற்றிருந்தது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் மற்றவர்களின் கருத்துக்களை இம்மியும் கவனத்தில் எடுக்காமல், தான் நினைத்ததே சரி என்றவாறு செயற்பட்டார்.

அவரின் அந்தப் போக்கை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக கூட்டமைப்பு அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுகின்றதோ என்ற சந்தேகம் கூட்டமைப்புக்குள்ளும் ஏற்பட்டிருந்தது.

தமிழ்மக்களுக்கான உரிமை விடயத்தில் தீர்வை எட்டுகின்ற பயணத்தில் கூட்டமைப்பினர் கரிசனை கொள்ளவில்லை என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டனர்.

சில இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளைக் குற்றம்சாட்டுவது போன்ற கருத்துரைகளையும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் முன்வைத்தார்.

இவ்வாறான சூழ்நிலை ஏற்பட்ட கட்டத்தில் மாகாண சபைத் தேர்தல் நடந்தேறியது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் களமிறங்கியது.

மாகாண சபைத் தேர்தலில் வாக்களித்து தமிழர்களுக்கான அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருந்தனர்.

அதன் விளைவு, வடக்கு மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றிருந்தது.

நீதியரசர் விக்னேஸ்வரன் வடக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சர் என்ற பெருமையோடு பதவியேற்றார்.

எனினும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக சம்பந்தர் நிறுத்தியமை கூட்டமைப்பிற்குள் இருந்த சிலருக்கு உடன்பாடாக இல்லாதபோதிலும் இரா.சம்பந்தர் எடுத்த முடிவை எதிர்க்கின்ற துணிச்சல் இன்மையால் அவர்கள் மனதிற்குள் புளுங்கிக் கொண்டனரேயன்றி, தம் எதிர்ப்பை வெளிக்காட்டிலர்.

எனினும் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் பதவியேற்று மாகாண சபை நிர்வாகம் நடந்து கொண்டிருக்கையில், மாகாண சபையைக் குழப்புவதில் கூட்டமைப்பின் முக்கிய புள்ளிகள் சிலர் தீவிரமாக ஈடுபட்டனர். தமிழரசுக் கட்சியின் இளம் அரசியல்வாதிகள் மூலம் சபையைக் குழப்பும் சதித்திட்டம் அமுலாகிக் கொண்டிருந்தது. வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இதனால் அமைச்சர்களை மாற்றுகின்ற அதிரடி நடவடிக்கைகளை முதலமைச்சர் எடுக்க வேண்டியதாயிற்று.

ஒரு கட்டத்தில் ஒட்டுமொத்த மாகாண சபையையும் குழப்பி அதனை இயங்கவிடாமல் செய்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அதிக கரிசனை கொண்டிருந்தது.

எனினும் இது விடயத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்குச் சம்பந்தமில்லை என்ற உண்மையையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

போருக்குப் பின்பான கூட்டமைப்பின் செயற்பாட்டில் ஏற்பட்ட நம்பிக்கையீனங்களும் வடக்கு மாகாண சபையில் ஏற்பட்ட குழப்பங்களும் தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் படுமோசமாகப் பாதிக்கும் என்பதைத் தமிழ்ப் புத்திஜீவிகளும் தமிழ்ப் பற்றாளர்களும் உணர்ந்த நிலையில், எல்லாவற்றையும் எதிர்கொண்டு ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நன்முயற்சியின் பயனாக 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி தமிழ் மக்கள் பேரவை உதயமாயிற்று.

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், இதய வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன் மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தவசந்தாராஜா ஆகியோரை இணைத்தலைவர்களாகக் கொண்டு, யாழ்ப்பாண நூலக மண்டபத்தில் தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டது.

பேரவையின் முகிழ்ப்பு ஒரு பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியதென்பதைக் கூறித்தானாக வேண்டும்.

அதேநேரம் பேரவையைச் சாடுவதில் சிலரும் சில ஊடகங்களும் காட்டிய அக்கறைப்பாடு சொல்லிமாளா.

ஆயினும் உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள தமிழ்மக்கள் பேரவைக்குத் தமது ஆதரவை வழங்கினர். தமிழ் மக்கள் பேரவையின் உதயம் காலத்தின் தேவை என்பதை அங்கீகரித்தனர். 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை தமிழ்மக்களுக்கான தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து அதனை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிட்டும் வைத்தது.

தொடர்ந்து எழுக தமிழ் எழுச்சி என்ற மாபெரும் பேரணியை நடத்தி, தமிழ் மக்களின் உரிமைசார் விடயத்தை உலக அரங்கில் உயர்த்திக் காட்டியது.




இதற்கு மேலாக, வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு எதி ராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை மக்கள் எழுச்சி மூலம் முறியடித்த தமிழ் மக்கள் பேரவை தமிழ் அரசியலை நிதானப்படுத்துவதிலும் தமிழர் எழுச்சியை நிலை நிறுத்துவதிலும் மூலகாரணமாய் நிற்கின்றது என்ற செய்தியை ஆறு ஆண்டுகளின் நிறைவில் நினைவுபடுத்துவது பொருத்துடையதாகும்.

அதேவேளை தமிழ் மக்கள் பேரவையின் பணி இன்னும் பயனுறுதி மிக்கதாய் அமைவதும் அவசியமாகும்.

புருசோத்தமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தர்மத்தின் வழி நின்றால் நன்மை இல்லை என்கிறார்கள் சிலர். அது சரியானதா வியா சரே?

**சுதன் குப்பிழான்**

**வடக்கு, கிழக்கு பிரித்தாகிவிட்டது. இனியும் 13 ஆவது திருத்தத்தில் நிற்பது சரியா?**

தமிழினத்திற்கு கொஞ்சமேனும் அதிகாரம் வழங்கக் கூடிய சட்ட திருத்தம் 13 ஆவது திருத்தத்தில் தான் உண்டு.

அதைப்பெறுவது மட்டும்தான் எமது நோக்காக இருக்கக் கூடாது. 13 இற்கும் அப்பால் சென்று தீர்வு தர வேண்டும் என்பதில் ஆணித்தரமாய் நிற்க வேண்டும்.

முதலில் உயிர் வாழ்வதற்கு பாணை வாங்கி உண்போம். அதன்பின் சோறு கேட்கலாம் என்றால் பாணும் கிடைக்காமல் போய்விடும்.

**மதுவன் மீசாலை**

**பணம் பந்தியிலே குணம் குப்பையிலே எனும் தத்துவம் பற்றி கூறுங்கள் வியாசரே?**

வீட்டு விசேடம் ஒன்றிற்கு பெரிய மனம் படைத்தவரும் பரம ஏழை ஒருவரும் ஒரே நேரத்தில் வருகிறார்கள்.

வாசலில் நின்ற வீட்டு உரிமையாளர் பணம் படைத்தவரை முதலில் அழைக்கின்றார். அவருக்கு சந்தனம் எடுத்துக் கொடுத்து அவரை அழைத்துச் சென்று அமர வைத்து விட்டு வருகிறார்.

ஏழை அந்த இடத்திலேயே நிற்கின்றான். அதன் பின்பே அந்த ஏழையை அழைத்து சந்தனம் வழங்கி உள்ளே அனுப்புகின்றார் அவர்.

சொந்தமாக இருந்தாலும் பணமே முதன்மை பெற்று நிற்கின்றது. குணம் கொஞ்சம் தூரத்தே நிற்கும் எப்போதும்.

**சுந்தரம் அம்பன்**

**வடக்கு, கிழக்கில் தொழிற்சாலைகளை மீள ஆரம்பிக்க ஆட்சியாளர்கள் தயங்குவது ஏன் வியாசரே?**

தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் அங்கு பல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும்.

அப்படி பல இளைஞர்களை ஒன்றுபடுத்தி விட்டால் மீண்டும் இளைஞர்கள் தமக்கெதிராய் போராடத் தொடங்கிவிடுவார்களோ என்ற பயமாகக் கூட இருக்கலாம்.

**தமிழ் யாழ்ப்பாணம்**

**மாநகரசபை பட்ஜெட் வெற்றி பெற்றது பற்றி உங்கள் கருத்து என்ன வியாசரே?**

ஒருவன் நல்லது செய்கிறான் எனின் அதற்கு நாம் ஆதரவளிக்க வேண்டும்.

எமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தில் எதையும் செய்யாமல், இருந்ததை இழந்த பின் வந்தவர் நல்ல திட்டங்களை செய்ய அவரை ஆதரிக்காமல் எதிர்த்தால் அதன் அர்த்தம் என்ன என்பது இப்போது புரியாது. அடுத்த தேர்தல் ஒன்று வருமல்லவா அப்போது புரியும்.

மக்களுக்கான சேவை என்பது மலையேறிப் போக கட்சிகளுக்கான தேவை என்பதே கதிரையாகிவிட்டது.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**

**021 567 1532**

**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**மகேஸ்வரன் வரணி**

**ஆலயங்களில் சுருவங்களையும் உண்டியலையும் திருடும் திருடருக்கு மறுபிறவி என்னவாக இருக்கும் வியாசரே?**

நிச்சயம் நகரம் என்பது உறுதி.

அண்மையில் ஒரு கோவில் உண்டியலை உடைத்த திருடன் ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டுச் சென்றிருக்கின்றான்.

கொரோனாவினால் நான் வேலை இழந்து விட்டேன். வீட்டில் சாப்பாட்டிற்குக் கஷ்டம். ஆதலால் இந்த உண்டியலை உடைத்துச் செல்கின்றேன்.

வேலை கிடைத்து உழைத்து மீண்டும் எடுத்த தொகையினை உண்டியலில் போடுவேன் என்று.

திருடர்களிலும் சில நல்லவர்களும் இருக்கத் தான் செய்கின்றார்கள் போலும்.

**இதழினி திருநாவலூர்**

**பத்திரிகை வாசகர்களை சில பத்திரிகை நிறுவனங்கள் அலட்சியம் செய்வது ஏன்?**

அலட்சியம் என்பது எப்படிப்பட்டது என்பதைத் தெரிந்து கொண்டால் நல்லது.

ஒரு பத்திரிகை நிறுவனத்திற்கு சராசரியாக ஒரு நாளைக்கு 100 இற்கு மேற்பட்ட கடிதங்கள் வரும். 1000 ஐத் தாண்டிய E-mail தகவல்கள் வரும்.

இவற்றை எல்லாம் எடுத்து பார்த்து ஒழுங்குபடுத்தி பிரசுரிக்க முடியுமா, இல்லையா என தெரிவு செய்து அதை பிரசுரிப்பதென்பது சாவசதாரணமான ஒரு விடயமல்ல.



நான் தமிழன் என்பதில் பெருமை கொள்கிறேன், நீங்கள்?

**சிவன் வதிரி**

**மழை இப்போதைக்கு ஓய்வது போலத் தெரியவில்லையே, போற போக்கைப் பார்த்தால் பொங்கல் வரை போகும் போல உள்ளதே?**

அடே மனிதா! கொஞ்ச நஞ்ச அநியாயமா இந்த உலகிற்குச் செய்தாய்.

பூமியின் அடியைக்காண ஆழ்துளையிட்டாய். உயிர் உருவாக்கத்தை அறிய சுரங்கம் தோண்டி வெடிப்பைச் செய்தாய்.

செவ்வாயில் உயிர் வாழலாமா என்று சற்றலைற் மேல் சட்டலைட் விடுகிறாய்.

வேற்றுக்கிரகவாசிகள் வாழ்கிறார்களா? என்பதை அறிய கோடிக்கணக்கில் பணத்தை கொட்டுகிறாய். உன் பலத்தை நிரூபிக்க பாலைவனத்திலும் தரிசு நிலத்திலும் அணுகுண்டை வெடிக்க வைத்து உலக சமநிலையைக் குழப்பினாய்.

இது அனைத்திற்கும் இயற்கை பாடம் கற்பிக்கும் அல்லவா. அதை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

**தேரா மானிப்பாய்**

**தர்மத்தின் வழி நின்றால் நன்மை இல்லை என்கிறார்கள் சிலர். அது சரியானதா வியாசரே?**

ஒரு நாளும் இல்லை. அண்மையில் வரணியைச் சேர்ந்த வெறும் 21 வயதே ஆன மதுசன் என்ற இளைஞன் வீதியில் கிடந்த 40 இலட்சம் பெறுமதியான தங்க நகையினை எடுத்து அதை பத்திரமாய் உரிமையாளரிடம் ஒப்படைத்திருக்கின்றார்.

அது தர்மம். அதனால் இன்று பலரும் அந்த இளைஞரைப் பாராட்டுகின்றனர். தேடிச் சென்று அவரை வாழ்த்துகின்றனர்.

மதுசனின் தர்மத்தின் வழிநின்ற செயல் இன்று அவரை இந்த உலகமே கொண்டாடும்படி செய்துள்ளது.

அதே அந்த நகையினை அவர் தனதாக்கியிருந்தால் நிலை எப்படி இருந்திருக்கும்.

**கேதீஸ் தெல்லிப்பழை**

**நான் தமிழன் என்பதில் பெருமை கொள்கிறேன், நீங்கள்?**

அண்மையில் சமூக வலைத்தளத்தில் இந்திய பேச்சாளர் சுகி சிவம் அவர்களின் பேச்சு ஒன்றைப் பார்த்தேன்.

அவர் பேசும் போது, தமிழை தமிழாய் அப்படியே பேசுபவர்கள் ஈழத் தமிழர்கள். அதற்காய் நாம் பெருமை கொள்ள வேண்டும் என்றார்.

அத்தோடு ஈழத்திற்கு நான் சென்றபோது நண்பர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்தேன்.

அப்போது அந்த வீட்டின் சிறு பிள்ளை நித்திரையில் சிரித்ததை பார்த்து ரசித்தேன்.

பிள்ளை அணுங்குகிறான் எனக் கூறினார் என் நண்பர். அணுங்குதல் என்ற சொல் மிகவும் பழைமையான சொல். கம்பராமாயணத்தில் கம்பன் பாவித்த சொல். அந்தச் சொல்லை ஈழத்தில் இன்னமும் பாவிக்கின்றார்கள் எனின் தமிழ் அவர்களின் மூச்சாய் வாழ்கிறது.

ஈழத் தமிழரால் மட்டுமே தமிழ் இன்றுவரை வாழ்கிறது என்றும் கூறினார்.

உண்மையில் எனக்கு பெருமையாக இருந்தது நான் ஒரு ஈழத் தமிழன் என்பதை நினைத்து.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனிய உன் இறுதி நாள்

நாபியின் நுண்காற்று
உன்னை மறக்கும் போது
செம்புனல் தசையுடன். இறுகி
இணையும் போது
கண் வழி காற்றாய் ஆவி
காதைவழி கடக்கும் போது

நீயா நானா தடை தாண்டலில்
உலகமேடை நாடகம் நடத்தி
பொருளா ? பணமா?
பட்டம் பெற்று...
நன்மை தீமை நாலும் புரிந்து
சட்டமும் சாதியும்
ஓதி ஒழித்து
உண்ணாது சேர்த்து
ஊர்க்கழித்ததும்,
உன் வங்கி நிறைத்தும்
வயிறு காய்த்தும்

அன்பு தணியும்
அந்திவேளையில்
நன்மைக்கும் தீமைக்கும்
முந்தியும் பிந்தியும் விரல்
நீட்டி கைகோர்த்து
கொடிபிடித்து விட்டு
வெள்ளை கவசத்தால்
வெட்கமின்றி மூடி விடப்பட்ட
விறைத்த விரல்கள் -இங்கு
விடைபெறும்போது
இத்தனை பணிவாய் கும்பிட்டு,
கேட்பது நன்றியா? மன்னிப்பா?

கட்டில் கம்பியோ? இரும்போ?
மெத்தை இலவமோ? தும்போ?
செத்தபின் என்ன?
மட்டப் பலகைதான்
ஒட்டிவரும் உன்னோடு
கட்டியணைக்கவும்
காதல் செய்யவும்
உன் மார்பை திறக்க
முடிந்தால் திற


அன்புடன் கொடுத்தும்
அகந்தையில் கனத்தும்
பண்புடன் திகழ்ந்தும்
பணத்தில் மதிபிறழ்ந்தும்
நல்லவனாயினும்
தாய் மகனாயினும்
தானம் தருமம் என்று
தரணி போற்றினும்
ஈயாபிசினி என்று
எள்ளிநகையாடினும்
என்னதான் பலன் உனக்கு
ஒற்றை ரூபா ஒட்டிய நெற்றிக்கு
சுடலை ஞானம் புரியுமா என்ன?
வெற்றுக்கூடு...

கொள்ளை நோய் கொண்டால்
மலர் மாலையும் இல்லை
மையச் சாலையும் இல்லை
இன்று நீ நாளை நான்,
ஒருவர்பின் ஒருவர்
ஓடி ஒளிக்க முடியாது
தேடியேவரும் நம்மை
தேதி குறித்திருக்கும்.
காரியம் முடியும் வரைதான்
கதையிலும் நீயிருப்பாய்

கேட்காத காதுக்கு மேளச்சத்தம்
பார்க்காத கண்ணுக்கு நடனமாட்டம்
தோளில்லை கைபோட தோழர் கூட்டம்
நீ செய்த குறும்புக்கு சாதனை தோரணம்
தலைகீழாய் அங்கே!
உன்னை எழுதிய காகிதம்
தெருத்தெருவாய் காற்றாடும்
காலம் கடக்க முன்
உன் நினைவு கடந்து போகும்
சதை ஊனமாகி
எலும்பு மண்ணாக
மறதியின் புத்தகத்தில் நீ
நினைவின்றியே போவாய்.
மரணித்துப்பார் அடங்கும் எல்லாம்.

பிரம்மியா சண்முகராஜா

# இயற்கையின் நியதி



சாவு இப்போ சர்வ சாதாரணம் காவு கொள வந்த கொரோனாவால்
சவக்கிருத்தியமில்லை பறை ஒலி இல்லை தோரணமும் கட்டித் தொல்லைப்
படவுமில்லை ஆவ் அணியுமில்லை கட்டி அழுவதற்கும் கைகோர்ப்பு
இல்லை கொரோனா பொசிட்டிவ் எனில் கோம்பயன் மணலில்
நாளும் நாலு பிரேதம் எரிக்கப்படும் மின்சார வசதி மட்டுமல்ல விறகு
அடுக்கல் இல்லை பிரேதம் எரிப்பதற்கு நிற்போருமில்லை வெற்றிலை
பாக்கு செலவுமில்லை வெறும் அம்புலன்ஸ் வண்டி ஆதரவில்
சுடலைக்கு வாகனம் சுறுக்கென ஊரறியாமலே ஊர்வலம் முடியும்
கொள்ளிக் குடமுமில்லை கொள்ளியுடன் மூன்றுமுறை சுற்றி முட்டிகொத்தல்
இல்லை வீட்டுப் படலையில் உலக்கை குறுக்க கிடத்தி நீர் வாளி வைத்து வாயில்
வேப்பிலை சப்பும் சங்கதிகள் இல்லை வீடு கொறன்ரையின் ஆகி
கூடவர யாரும் இல்லை தனிமைப்படுத்தியதால் வெளியே
வெளிக்கிடவும் ஏலாது துக்கம் விசாரிக்கவும் சுற்றமில்லை
துக்கவிசாரிப்பு தொலைபேசி கைப்பேசியோடு கரைந்துவிட்ட
கொரோனா இறப்பு என்பது துக்கமல்ல அது வெறும் பிரிவு
மட்டுமே எனும் மனம் ஆறுதலடைய வைத்த இயற்கையின் நியதி இதோ

வை.க.தவமணிதாசன்

## மௌனத்தின் தேடல்- 541



## குந்தியிருந்து

குந்தி இருந்து சமைக்க நொந்து
குடிசை வாழ்வில் வெறுப்பில் வெந்து
ஊதுகுழலினால் அடுப்பு எரிந்து
உள் மூச்சு ஆழம் நலமும் தெரிந்து
முந்தைக்கால வளத்தை தேய்ந்து
மூழ்கிட வெடித்துச் சிதறும் வியந்து
அரசின் விகடமான கிரந்தம்தானே

கார்வண்ணன்
காவலூர்

## நியாயம் கேட்கிறேன்

நியாய விலையில் விற்ற சிலிண்டர்
விலையேறிப்போனதால்
துவண்டுவிடவில்லை
நம் மிடில் கிளாஸ் மக்கள்- ஆனால்
கலப்படமான காஸ் சிலிண்டரால்
வெடிச்சு சிதறியதோ நம் இனம்
கொரோனாக்கு மாஸ்க் இருக்கு.. இதற்கு?

இரா.ஜெ.துஸ்யந்தா
மாதகல்.

## விலைவாசி

மலைகளை முட்டும் விலைவாசி
அடிப்படைத் தேவைகள் அஸ்தமனம்
நாட்டில், நோய், பஞ்சம், பட்டினி
மனிதர்கள் பிணங்களாய் வீதிகளில்
கழுகுகளின் கொண்டாட்டம்

கும்பவாழியன்
உடுப்பிட்டி

## சிந்தை ஏதடா?

கைக்கவசம் முகக்கவசம்
சூடிய இளம் மானிடா
சிந்தை ஏதடா விலை
கொடுத்து வினைதேடும்
படலம் ஏனடா மதி
மயங்கி சமையலறைக்
குண்டு வெடிப்பால்
உன் மூச்சை காவு
கொடுக்கவா போகிறாய்

எஸ்.எஸ்.உமாசிவம்,
வவுனியா

## எரிவாயுவும் கோபத்தீயும்

கோபம் ஓர் பாவத் தீ! பாவம்!
எல்லை தாண்டிவிடும் தீயாய்
எரிவாயு சிலிண்டர் வெடித்து
சிதறி அழிப்பது போல!
கோபத்தீ வெடித்து மனிதனை
பற்றி எரித்தால் அழிவே மிஞ்சும்!
இன்று எரிவாயு கொள்கலன் ஆளுகிறது
அரச கொள்கலன் அரச சமையலாக!
நின்று பிடிக்க முடியாமல் மாளுகிறது
விபத்து, தற்கொலை, நோய்கள் பட்டினி
என எதிர்பாராத உண்மை சம்பவங்களாய்

[illegible]

## மௌனத்தின் தேடல்- 542



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## காலத்தின் மோகம்

அதிகாலைப் பொழுதினிலே ஆயிரம் ஆசைகளை
நெஞ்சினிலே சுமந்து அதீத சேவையாற்றும் சேவகனே
நீ சுமந்து செல்வது உன்னத பொருள் அல்ல
உயிரை மாய்க்கும் உயரிய விஷமப் பொருள்
என்பதனை எப்போது உணர்ந்து கொள்ளப் போகிறாயோ?

ஆ.பாலமதுஜா, யா/ மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

## மண்ணில் நீதி

இயமன்தான் இறுதி நாளில் எம்மைக் காவு கொள்வான்
கயமை காஸ் சிலிண்டர் வடிவில் இயமன் காவும் இந்த நிலைக்கு
மனிதம் மாயும் கொடுமை கேட்க மண்ணில் நீதி மரணம் தானோ


வைகதன், கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**"குழந்தையின் இறுதி நிகழ்வை முகாமிலிருக்கும் பெற்றோர் பார்ப்பதற்கு விரும்பினால், அதனை 'ஸ்கைப்' மூலம் பெற்றோருக்கு காண்பிக்க தாங்கள் தயார் என்று இந்தோனேசிய தரப்பு 'ஸ்கைப்' விபரங்களை அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சிடம் வழங்கியிருந்தது"**

## வலி சொல்லும் தொடர்... 12




மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் நிர்வகிக்கப்படுபவை. ஆக, இங்கு யாராவது அகதிக்கு ஒட்சிசன் மேலதிகமாக தேவையென்றால் கூட, மத்திய அரசு அதிகாரிகள்தான் 'சிலிண்டர் கொடுக்கலாம்' என்று அனுமதி வழங்கவேண்டும்.

புதிய அகதிகளில் வித்தியாசமான நடத்தைகள் தென்படுகின்றனவா? கொண்டுவந்த பொதிகளில் முகாமுக்கு ஒவ்வாத பொருட்கள் உள்ளனவா? பயங்கரவாதிகள் யாராவது அகதிகள் என்ற போர்வையில் வந்து இறங்கியிருக்கிறார்களா? முக்கியமாக, ஆள்கடத்தல்காரர்கள் - படகைச் செலுத்திவந்தவர்கள் - இந்தக் கூட்டத்தில் இருககிறார்களா? என்றறிய புலனாய்வுக்காரர்கள் மொய்த்தபடி நின்றார்கள்.

பிரத்தியேகமாக அங்கு நின்றுகொண்டிருந்த நான்கு அதிகாரிகள், மண்டபத்தில் நடைபெறும் அத்தனை நடவடிக்கைகளையும் வீடியோ பதிவு செய்து கொண்டிருந்தார்கள்.

"உங்கட முழுப்பெயர் என்னவாம்?" "குலசேகரம் குயிலன்."

குடிவரவு அதிகாரிகளின் முன்னிலையில் மொழிபெயர்ப்புக்கு உதவி செய்துவிட்டு, "சார்ளி' கம்பவுண்டின் ஏழாவது அறையில் தங்க வைப்பதற்கு குயிலனையும் மனைவியையும் ஒரு பெண் அலுவலரோடு அனுப்பிவைத்தேன்.

நீதன், குயிலன் குடும்பம் உட்பட பலரோடு நடுக்கடலில் வெடித்து மூழ்கிய படகிலிருந்தவர்களின் சடலங்கள் இரண்டு நாட்களாக இந்தோனேசியாவில் கரையொதுங்கத் தொடங்கியிருந்தன.

கடலில் கிடந்து உப்பிப் பெருத்த குயிலனின் குழந்தை உட்பட பலரது சடலங்கள் இந்தோனேசிய பண்டபக் கடற்கரையிலிருந்து மூன்றரை கிலோமீற்றர் தூரத்தில் ஒருநாள் காலை மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டன.

பொலிஸாருக்குத் தகவல் கொடுக்க, அவர்கள் அம்புலன்ஸ் ஒழுங்கு செய்து வந்து, பத்திரமாக தூக்கிச் சென்றிருக்கிறார்கள். மனிதாபிமான அடிப்படையில், இந்தோனேசிய அரசு இந்தத் தகவலை அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சுக்கு அறிவித்தது.

இதையடுத்து, மெல்பேர்ன் முகாமிலிருந்த குழந்தையின் பெற்றோருக்கு செய்தியைத் தெரியப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

குடிவரவு அமைச்சிலிருந்த எனது நெருங்கிய நண்பன், காலை குறுந்தகவல் அனுப்பி, இதைச் சொன்னான். காயப்பட்ட கடலில் சீழ் வடிவது போலிருந்தது. ஆறு மாத சிசுவை விழுங்கிய - வெறிபிடித்த - கடலை உலகின் எல்லா மொழிகளிலும் சபிக்கலாம் போலிருந்தது.

வேலைக்கு வந்தேன். குடிவரவு அமைச்சு அலுவலகத்தில் வழக்கமான காலை சந்திப்பு இடம்பெற்றது. எதிர்பார்த்தபடி, குழந்தையின் தகவல் தெரிவிக்கப்பட்டது. குயிலன் குடும்பத்தை, சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு அறை ஒன்றுக்கு அழைத்து, செய்தியைச் சொல்வது என்று தீர்மானிக்கப்பட்டது. அதிகாரத் தரப்புக்கு இது வெறும் செய்திதானே! கூடுதலாக இன்னொரு அறிவித்தலும் அந்தச் சந்திப்பில் சொல்லப்பட்டது.

குழந்தையின் இறுதி நிகழ்வை முகாமிலிருக்கும் பெற்றோர் பார்ப்பதற்கு விரும்பினால், அதனை 'ஸ்கைப்' மூலம் பெற்றோருக்கு காண்பிக்க தாங்கள் தயார் என்று இந்தோனேசிய தரப்பு 'ஸ்கைப்' விபரங்களை அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சிடம் வழங்கியிருந்தது.

விபரங்கள் அடங்கிய பிரதியை அதிகாரி ஒருவர் மேசையின் எதிர்ப்புறத்திலிருந்து என்னை நோக்கித் தள்ளினார். இந்தோனேசிய நேரம் காலை ஒன்பது மணிக்குச் சடலங்களை அடக்கம் செய்யப்போவதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

'சார்ளி' கம்பவுண்டிலிருந்து குயிலனும் மனைவியும் மதியமளவில் குடிவரவு அமைச்சின் சந்திப்புகள் நடைபெறும் பிரத்தியேக அறைக்கு அழைத்துவரப்பட்டனர். இருவரது முகங்களும் நான்கு நாட்களில் ஓரளவுக்குத் தேறியிருந்தன.

களைப்பு தீராத கண்களில், குழந்தையின் இழப்பு மாத்திரம் அழியாத துயர் வரிகளாக தெரிந்துகொண்டேயிருந்தன. படகில் தங்கள் குடும்பங்களைப் பறிகொடுத்த ஏனைய ஏழு குடும்பங்களும் வெவ்வேறு சந்திப்பு அறைகளுக்கு, அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

ஒவ்வோர் அறைக்கு வெளியிலும் உள்ளேயும் மேலதிக உத்தியோகத்தர்களும் ஒவ்வொன்றுக்கும் ஒரு மருத்துவ தாதியும் வெளியில் நின்றுகொள்வது என்று தயார்செய்யப்பட்ட திட்டத்தில் குறித்துக்கொண்டோம்.

அவுஸ்திரேலிய நேரப்படி மதியம் பதினொன்றே முக்காலுக்கு ஒவ்வொரு குடும்பமும் குறிப்பிட்ட அறைக்கு அழைக்கப்பட்டனர். குயிலனையும் மனைவியையும், சந்திப்பு அறையிலிருந்த குடிவரவு அதிகாரியிடம் அழைத்துப் போனேன். "உங்கட வீட்டில எல்லோரும் நல்லா இருக்கிறாங்களா அண்ணா?"

வந்த நாள் முதல் தங்கள் துயரங்களையே சொல்லிச் சொல்லி அழுவது போன்ற குற்ற உணர்வினால் தீண்டப்பட்ட குயிலனின் மனைவி, தனது காயப்பட்ட மனதை இயன்றவரை மறைத்துக்கொண்டு அந்தக் கேள்வியை கேட்டாள்.

என்ன பதில் சொல்லிட முடியும் அவளுக்கு? முகாமில் கொடுத்த மலிவான 'டைலி' சோப்பு குயிலனிலும் மனை வியிலும் அவுஸ்திரேலிய அகதி வாசத்தைப் பூசியிருந்தது.

குழந்தை தொடர்பான விபரத்தையும், தங்களது மனநிலை சார்ந்த பிரச்சினைகளையும் நான்கு நாட்களாகத் தொடர்ந்து கேட்டுக் கேட்டு, கவனிப்பதாகக் காண்பித்துக்கொண்ட, முகாம் நிர்வாகத்தின் இன்னொரு சந்திப்புத்தான் இதுவும் என்ற எதிர்பார்ப்பில் இருவரது கண்களிலும் சலிப்பு தெரிந்தது.

சந்திப்பு அறைக்குள் சென்ற நான்காவது நிமிடத்தில் குடிவரவு அதிகாரி சொன்ன செய்தியால் குயிலனின் மனைவி மேசையில் தலையை அடித்துக்கொண்டு குழறி அழுதாள்.

குயிலன் தனது இரண்டு கைகளாலும் நெஞ்சில் அறைந்து ஓலமிட்டான். அருகிலேயே நின்று கொண்டிருந்த நான், குயிலனைத் தாங்கிக் கொண்டேன். இன்னொரு பெண் அதிகாரி, குயிலனின் மனைவியை - தலையில் காயம் ஏற்பட்டுவிடாமல் - தன்னோடு அணைத்து, அழுவதற்கு அனுசரணையாயிருந்தாள்.

எதிர்பார்த்த காயமென்றாலும் வலிகளைத் தாண்டிச் செல்ல வாழ்க்கை எந்த குறுக்குவழியையும் கண்டுபிடித்து விடவில்லையே.

(அடுத்த வாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## காவலனை நோக்கி வந்த காலன்




உதிக்கலாமா வேண்டாமா என்று உறுதியற்றுச் சலனப்படுவனபோல் ஆதவன் மிகுந்த சந்தேகத்துடன் நீர் மட்டத்துக்கு மேல் மெள்ளத் தலையை நீட்டத் துவங்கிய அந்த அதிகாலை நேரத்தில்கூட அக்ஷய முனைக் கடலோரம் கோபத்தின் வசப்பட்ட மனித புத்தியைப் போல் மிதமிஞ்சிய உஷ்ணத்தைக் கக்கிக் கொண்டிருந்தது.

பூமத்திய ரேகை தன்னை இரண்டாகப் பிளந்து சரிபாதி உடலில் பாய்ந்து சென்றதால் சாதாரண காலத்திலேயே நல்ல உஷ்ணத்தைப் பெற்றிருந்த சுமத்ரா என்ற சொர்ண பூமித்தீவு, தனது வடக்குக் கோடியில் கடலில் தலை நீட்டிக் கொண்டு முப்புறமும் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்த அக்ஷய முனைக்கு, கோடை காலத்தின் அந்த காலையில் அளவுக்கதிகமாகவே உஷ்ணத்தை அளித்திருந்ததால், கரையிலிருந்த கடல் நாரைகள் தரையிலிருந்து பறந்து சென்று அலைப் பரப்பில் உட்கார்ந்து கொண்டன.

இடையே பூமத்திய ரேகை ஓடுவதாலேயே அதிக உஷ்ணத்தைப் பெற்றிருந்த சொர்ணபூமியின் மேல் திசையில், பாரதத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையைப் போலவே வடக்குத் தெற்காக ஓடிக்கொண்டிருந்த பகிட் பாரிஸான் மலைத்தொடரில் சுமார் தொண்ணூறு எரிமலைகளிருந்தபடியால் தீவின் உஷ்ணம் அபரிமிதமாக இருந்ததன்றி அந்த மலைத் தொடரின் துவக்கமும் அக்ஷய முனையை ஒட்டியிருந்ததால், அன்றைய அதிகாலையிலேயே காலை வைத்து நடக்க முடியாத அளவுக்குக் கடற்கரையோர மணல் பிராந்தியத்தில் சாதாரணமாகவே உஷ்ணம் மிதமிஞ்சியிருக்குமென்றால் அக்ஷய முனைக் கடலோர மணலின் தன்மை வேறு அந்தச் சூட்டைப் பன்முறை பெருக்கிக் கொண்டிருந்தது.

மனிதனால் வரையறுக்க முடியாத ஏதோ ஒரு காலத்தில் பகிட் பாரிஸாரின் எரிமலைகள் பொங்கி வழிந்தோடிய காரணத்தால் பல இடங்களில் கந்தகமும் சொர்ணக்கனிகளும் சொர்ணத் தீவின் மண்ணில் பரவிக் கிடந்ததன்றி அந்த இரசாயன உலோகப் பொருட்கள் அணுமாத்திரமாக மணலில் கலந்து தணல் போன்ற உருவத்தை மட்டுமின்றி குணத்தையும் கடலோர மணலுக்கு அளித்திருந்ததால், மணல் நல்ல வெள்ளை நிறமாக இல்லாமல் சற்று செந்நிறமாகவே காட்சியளித்ததல்லாமல், காலைத் தரையில் வைக்க முடியாத நிலைமையையும் ஏற்படுத்தியிருந்தது.

இத்தனை உஷ்ணத்தையும் கவ்விக் கரைத்துவிட இஷ்டப்பட்டன போல் அக்ஷய முனையை முப்புறத்திலும் பேரிரைச்சலுடன் தாக்கிய கடலலைகளை ஏளனம் செய்வதுபோல் தூரத்தே புகைந்து கொண்டு நின்ற எரிமலை அவ்வப்போது தன் தீ நாக்கை வெளியே நீட்டி நீட்டி உள்ளுக்கு இழுத்துக் கொண்டிருந்தது. வாழ்வில் மலைபோல் வரும் துன்பத்தின் ஊடே சுகமும் உண்டென்று குறிப்பிடுவது போல் அத்தனை உஷ்ணத்தையும் மீறி மலைப்பகுதியிலிருந்த காட்டிலிருந்து சில்லென்ற காற்றும் நீண்ட நேரத்திற்கு ஒருமுறை இரு விநாடிகள் வீசிவிட்டுச் சென்று கொண்டிருந்தது.

அந்த இன்பக் காற்று வீசிய நேரங்களில் மலைக்காட்டுப் பகுதியிலிருந்து கூட்டம் கூட்டமாகப் பறந்து வந்த பற்பல வர்ணப் பட்சிகள் கரையோரத்திலும் நீர் மீதும் விதவிதமாகச் சஞ்சரிக்கத் தொடங்கியதால் அத்தனை உஷ்ணத்திலும் தாபத்திலும் அந்தக் கடலோரம் கண் கொள்ளாக் காட்சியாகவே இருந்தது. அந்தக் காட்சியை உச்ச நிலைக்குக் கொண்டு போகவோ என்னவோ பாராபடு நதி பல கிளைகளாகப் பிரிந்து அந்த அக்ஷய முனைக் கடலுக்குள் வெகு கம்பீரத்துடன் பாய்ந்து கொண்டிருந்தது.

பாராபடு நதி அப்படிப் பல பிரிவுகளாகப் பாய்ந்ததால் அக்ஷய முனைக்குப் பெரும் இலாபமே இருந்தது. சொர்ண பூமியின் வடக்குப் பகுதியிலுள்ள ஐந்து துறைமுகங்களில் வடமேற்குப் பகுதியிலிருந்த அக்ஷய முனைத் துறைமுகத்தில் கடலாழம் அதிகமாயிருந்ததன்றி, பாராபடுவின் பிரிவுக் கால்களும் ஆழமாயிருந்தபடியால் கிட்டத்தட்ட அக்ஷய முனை நகரத்துக்கு வெகு அருகில் மரக்கலங்கள் வர முடிந்தது.

அப்படி வந்த மரக்கலங்களிலிருந்து வர்த்தகப் பொருட்களை இறக்க நதிப் பிரிவுகளுக்கு இடையிடையே இருந்த மணற் குன்றுகள் உதவின. அது மட்டுமல்ல, அக்ஷய முனைத் துறைமுகப் பகுதியைச் சுற்றிலும் சற்று எட்ட சமுத்திரத்தில் சக்கர வட்டமாக அமைந்திருந்த சிறுசிறு தீவுகளும் அந்தத் துறைமுகத்துக்குப் பாதுகாப்பு அரண்களாக அமைந்திருந்தன. அக்ஷய முனையின் நகரமும் கடலுக்கு எதிரே இருந்த மலைச் சரிவில் அமைந்திருந்ததால் அந்த மலைக்கோட்டையிலிருந்து தூரத்தில் வரும் மரக்கலங்களை அறிய முடிந்ததாகையால் வர்த்தகத்துக்கும் பாதுகாப்புக்கும் சிறந்த ஓர் இடமாக அக்ஷய முனை பிரசித்தி பெற்றிருந்தது. அக்ஷய முனைக் கோட்டைப் பகுதியும் அதிலிருந்த சிறந்த வீடுகளையும் கவனிப்போர்களுக்கு அக்ஷய முனை நகரத்தில் செல்வத்துக்குக் குறைவில்லையென்பது தெரியவரும். அப்படி வீடுகளைப் பார்த்து நிலையைப் புரிந்து கொள்ளாத மந்த புத்தியுள்ளவர்கள் கூடக் கோட்டைச் சுவருக்குப் பின்புறத்தில் மலை உச்சியை ஒட்டித் தெரிந்த பெரும் மாளிகையின் சொர்ண கலசத்தைப் பார்த்தால் உண்மையைப் புரிந்து கொள்வார்கள்.

நதியின் பல பிரிவுகளுடன் மணற்பாதையொன்றும் கூச்சாகக் கடலுக்குள் நீண்ட தூரம் இயற்கையாகவே ஓடியதால் அக்ஷய முனை என்ற பெயர் பெற்ற அந்தத் துறைமுகம் அக்ஷய நகரத்துக்கு வெளியே கால் காத தூரத்திலிருந்த தென்றாலும் மலை உச்சிக்கருகிலிருந்த மாளிகைத் தலைவன் கண்களுக்குத் தென்படாமல் அந்தத் துறைமுகத்தில் எதுவும் நடக்க முடியாத முறையிலேயே அக்ஷய முனை அமைந்திருந்தது.

கோட்டைக்கும் கடலுக்கும் இடையே இருந்த மணற் பிரதேசம் பார்வைக்கு அத்தனை செல்வச் செழிப்புள்ளதாகப் புலப்படாமல் மூங்கில் வீடுகளின் கூட்டங்களால் நிரப்பப்பட்டிருந்தாலும் அந்த மூங்கில் வீடுகளில் மறைந்து கிடந்த செல்வம் கோட்டைக்குள்ளிருந்த பெரும் வீடுகளிலும் இருப்பது சந்தேகம் என்பதை அக்ஷய நகரத்தார் அறிந்திருந்ததன்றி, அந்த மூங்கில் குடில்களைச் சிறிதளவு கூட நெருங்காமல் எச்சரிக்கையாகவே இருந்தார்கள்.

அந்த மூங்கில் வீடுகள் கூட்டம் கூட்டமாக அந்தத் துறைமுகத்தின் பல பகுதிகளிலும் பிரிந்து காணப்பட்டதற்கும் காரணமிருந்தது. சொர்ண பூமியிலும் சாவகத்திலும் பொற்கிரிஸேயிலும் பாலியிலும் காணப்பட்ட பலதரப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றிப் பாரத நாட்டிலிருந்தும் ஆபிரிக்க, அரபு நாடுகளிலிருந்தும் பல வகுப்பினரும் அங்கு கூட்டம் கூட்டமாக வசித்து வந்தார்கள்.

அப்படி வசித்து வந்த அவர்கள் அனைவருமே கடலோடும் பொதுத் தொழிலைச் செய்து வந்தாலும் வசிப்பதில் மட்டும் பிரிவினையைக் காட்டித் தனித்தனிக் கூட்டமாக மூங்கில் வீடுகளை அமைத்திருந்தார்கள்.

அத்தகைய அந்தப் பிரிவினர் எல்லோருமே மாலுமிகளாதலாலும் எந்த நாட்டுப் பற்றுமில்லாதவர்களாதலாலும் அக்ஷய முனைப் பகுதியிலும் அக்கம் பக்கத்திலும் வரும் மரக்கலங்களை மடக்குவதையே தொழிலாகக் கொண்டிருந்ததாலும் அக்ஷய நகரத்தில் தங்குவதற்குச் செலுத்திய பங்கு போக மீதிப் பங்கு அந்தக் குடிசைவாசிகளிடம் மிதமிஞ்சி இருக்கவே குடிசையில் வாழ்ந்தாலும் பணத்துக்கு எக்குறையும் இல்லாதவர்களாகவே அவர்கள் காலங்கழித்து வந்தார்கள்.

அப்படி மிஞ்சிய பணத்தையும் நகைகளையும் கவர நகரத்துக்குள் பல வசதிகளை அந்த மாலுமிகளுக்கு அக்ஷய நகரத்தின் காவலன் செய்து கொடுத்திருந்தானாகையால், அந்தக் குடிசைகளின் செல்வம் ஒரேயடியாகத் தன் கைக்கு வரும் என்ற நிச்சயத்துடனேயே இருந்தான்.

அதன் காரணமாகவே அவர்களைத் தன் வீரர்களைக் கொண்டு எந்தவித இம்சையும் செய்யாமல் நிம்மதியும் சந்துஷ்டியும் மிக்க நிலைமையிலேயே வைத்திருந்தான்.

அவன் அவர்களை இம்சை செய்யாமலும் சுமுகமாகவும் வைத்திருந்ததற்கு முக்கியமான காரணம் வேறு ஒன்றும் உண்டு. அந்தக் குடிசையிலிருந்த மாலுமிகள் கடற்போரில் மட்டுமின்றி நிலப் போரிலும் நிகரற்றவர்களாகையால் அவர்கள் ஒன்றுசேர்ந்து நகரத்தின் மீது பாய்ந்தால் நகரத்தை அரை விநாடி தன்னால் காப்பாற்ற முடியாதென்பதை அவன் சந்தேகமற உணர்ந்து கொண்டிருந்தான்.

அதன் விளைவாகக் கூடியவரையில் அந்தக் குடிசைவாசிகளிடம் மிக அன்பாக இருந்த அக்ஷய நகரத்தின் காவலன் அடிக்கடி அவர்களிடையே ஏதாவதொரு சண்டையைக் கிளப்பிவிட்டு இரண்டொருவரைப் பலி கொடுத்து ஆட்சியை அங்கு ஸ்திரப்படுத்திக் கொண்டிருந்தான்.

தன்னையும் மீறி அவர்களிடையே ஒற்றுமை ஏற்படும் சமயங்களில் கடலில் ஏதோ பெரும் பொக்கிஷக் கப்பல்கள் வருவதாகத் தனக்குச் செய்தி வந்திருப்பதாக ஆசை காட்டி அந்த வேட்டைக்கு அவர்களை விரட்டி விடுவான்.

அத்தகைய செய்தியை அவன் மிகுந்த நாசூக்காகப் பரப்பிய அடுத்த சில நாழிகைகளில் பல மரக்கலங்கள் பாய் விரித்துக் கடலில் ஓடும். அப்படி ஓடும் கப்பல்களிடம் வேறு கப்பல்கள் அகப்பட்டால் அக்ஷயத்தின் காவலனுக்கும் இலாபம். அவர்களுக்கும் இலாபம். இல்லையேல் குடிசைவாழ் மாலுமிகளுக்குத்தான் நட்டம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணம் முடிந்து ஒரு மாதத்தில் கருத்து வேறுபாடா?

சமீபத்தில் திருமணம் செய்து கொண்ட ஜோடியான ஆர்யன் மற்றும் ஷபானா இடையே மனக்கசப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரபல ரிவியில் பாக்யலட்சுமி சீரியலில் செழியன் கதாபாத்திரத்தில் நடித்து வரும் ஆர்யனுக்கும், மற்றொரு ரிவியில் செம்பருத்தி சீரியலில் பார்வதி கதாபாத்திரத்தில் நடித்து வரும் நடிகை ஷபானாவிற்கும் கடந்த நவம்பர் மாதம் முதல் வாரத்தில் திருமணம் நடைபெற்றது.

இவர்களின் திருமணத்தில் இரு வீட்டார்களும் கலந்து கொண்டனரா? என்பது கேள்விக்குறியாக இருக்கும் நிலையில், ஆர்யனுடன் நட்பில் இருந்த பூவே பூச்சூடவா சீரியலில் நடித்த நடிகை ரேஷ்மா தான் இந்த திருமணத்திற்கு முழுக் காரணமாம்.

திருமணம் முடிந்த சில நாட்களில் நடிகை ஷபானா வெளியிட்ட பதிவு இணையத்தில் வைரலாக பரவியது. அந்தப் பதிவில், நாம் எல்லோருமே சில வலிகளை அனுவித்துத்தான் வந்திருப்போம்.

பலருக்கும் பலவிதமான பிரச்சினை இருக்கும். சிலர் பிரியமான ஒருத்தரை இழந்திருக்கலாம் என்று கூறியிருந்தார். இதனை அவதானித்த ரசிகர்கள் திருமணமான சில நாட்களில் என்ன பிரச்சினை என்று கேள்வி எழுப்பினர்.


மேலும் அவசரம் அவசரமாக நடைபெற்ற இவர்களின் திருமணத்தினை ஆர்யன் வீட்டில் ஏற்கொள்ளவில்லை என்றும், திருமணமாகி ஒரு மாதம் ஆகிய நிலையில் ஷபானா இன்னும் ஆர்யன் வீட்டிற்குச் செல்லவில்லை என்று கூறப்படுகின்றது.

அதுமட்டுமின்றி தேனிலவிற்காக 4 நாட்கள் கொண்டாட நினைத்து பாண்டிச்சேரி சென்ற இந்த தம்பதியர் ஒரே நாளில் திரும்பி வந்துள்ளனர். இதற்கும் என்ன காரணம் என்று தெரியாத நிலையில், இருவருக்கும் இடையே மனக்கசப்பு அதிகரித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

மேலும் ஆர்யன் குடும்பத்தினர், ஆர்யனை விட்டு நீயா விலகிடு என்று கூறும் வகையில் மிரட்டல் விடுத்ததாகவும் திருமணத்தினை முன்னின்று நடத்தி வைத்த நடிகை ரேஷ்மாவின் வீட்டிற்கு ஆர்யன் குடும்பத்தினர் சண்டையிட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

திருமணம் முடிந்து ஒரு மாதம் முழுவதாக முடியாத நிலையில், ஆர்யன்-ஷபானா குறித்து அடுத்தடுத்து வெளியாகும் தகவல்கள் ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# கண்ணீர் அஞ்சலி



வலம்புரி பத்திரிகை நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுமத்தைச் சேர்ந்த
திரு. C.G. திருமாலழகன் அவர்களின் அன்பு மருமகன்

**செல்வன். குகநேசன் சாரங்கன் (கனடா)**

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம்.
அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம் பொருளை வேண்டுகின்றோம்.


**வலம்புரி குடும்பம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அன்னை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : ஆர்.சுதர்சனம்
பாடியவர் : சந்திரபாபு



புத்தியுள்ள மனிதரெல்லாம்
வெற்றி காண்பதில்லை
வெற்றி பெற்ற மனிதரெல்லாம்
புத்திசாலி இல்லை
புத்திசாலி இல்லை
புத்தியுள்ள............
பணம் இருக்கும் மனிதரிடம்
மனம் இருப்பதில்லை
மனம் இருக்கும் மனிதரிடம்
பணம் இருப்பதில்லை
பணம் இருக்கும்..........
பணம் படைத்த வீட்டினிலே
வந்ததெல்லாம் சொந்தம்
பணம் இல்லாத மனிதருக்கு
சொந்தமெல்லாம் துன்பம்
புத்தியுள்ள.........
பருவம் வந்த அனைவருமே
காதல் கொள்வதில்லை
காதல் கொண்ட அனைவருமே
மணம் முடிப்பதில்லை
பருவம் வந்த.........
மணம் முடித்த அனைவருமே
சேர்ந்து வாழ்வதில்லை
சேர்ந்த வாழும் அனைவருமே
சேர்ந்து போவதில்லை
புத்தியுள்ள............
கனவு காணும் மனிதனுக்கு
நினைப்பதெல்லாம் கனவு
அவன் காணுகின்ற கனவினிலே
வருவதெல்லாம் உறவு
கனவு காணும்........
அவன் கனவில் அவள் வருவாள்
அவனை பார்த்து சிரிப்பாள்
அவள் கனவில் யார் வருவார்?
யாரை பார்த்து அணைப்பாள்?

புத்தியுள்ள மனிதரெல்லாம்
வெற்றி காண்பதில்லை
வெற்றி பெற்ற மனிதரெல்லாம்
புத்திசாலி இல்லை புத்திசாலி இல்லை

# கோலியின் எதிர்காலம் என்ன?

விராட் கோலியை இனி இந்திய கிரிக்கெட் கப்டன் என்று குறிப்பிட முடியாது. "டெஸ்ட் அணி கப்டன்" என்றுதான் குறிப்பிட்டாக வேண்டும். கிரிக்கெட் உலகின் சக்திவாய்ந்த வீரராக விளங்கியவரிடமிருந்து ஒரு நாள் கப்டன் பதவி பறிக்கப் பட்டிருக்கிறது. மீண்டும் ஒரு இந்திய கப்டனின் பதவி 'பறிக்கப்பட்டிருக்கிறது!' சமீபத்தில் முடிந்த உலகக் கோப்பைக்குப் பிறகு இருபது-20 அணியின் கப்டன் பதவியிலிருந்து விலகினார் விராட். ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியையும் இனி வழிநடத்தப் போவதில்லை என்று அறிவித்திருந்தார்.

அப்போதிருந்தே 'ஒரு நாள் அணிக்கு ரோஹித்தைக் கப்டனாக்க வேண்டும்' என்கிற வாதம் மீண்டும் வலுப்பெற்றது. இந்நிலையில்தான், பி.சி.சி.ஐ. ரோஹித் ஷர்மாவை ஒரு நாள் அணியின் கப்டனாக அறிவித்திருக்கிறது.


இந்த அறிவிப்பு வெளியானதில் ஆச்சர்யமில்லை. இருபது-20 உலகக் கோப்பைத் தொடரின் லீக் சுற்றில் வெளியேறியபோதே 'ஒரு நாள் கப்டன் பதவியிலும் விராட் நீண்டகாலம் இருக்க முடியாது' எனப் பேச்சு எழுந்தது. அறிவிப்பு வெளியான விதம்தான் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

விராட்டுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகப் பொங்குகிறார்கள் அவர் ரசிகர்கள். கங்குலியின் கப்டன் பதவி பறிக்கப்பட்டதோடு இதை ஒப்பிடுகிறார்கள். பொதுவான ரசிகர்கள் சிலரும் கூட, "இந்த விதத்தில் நீக்கியிருக்க வேண்டாம்" என்று வருந்தினார்கள்.

இருபது-20 ஒருநாள் போட்டிகளில் இன்னும் கோலியின் தலைமையில் இந்தியா கோப்பை வென்ற வில்லை. தலைமைப்பண்பு கோப்பைகளால் கணக்கிடப்படும்காலகட்டம்இது. எனவே, 5 ஐ.பி.எல்.கோப்பைகள் வென்ற ரோஹித் பெட்டர் கப்டனாகத் தெரிவது இயல்புதான். ஆனால், கோப்பைகள் மட்டுமே கோலியின் நீக்கத்திற்குக் காரணமில்லை.

அணித்தேர்வில் செய்த முடிவுகள், களத்தில் எடுத்த முடிவுகள் என கோலியைச் சுற்றிப் பல சர்ச்சைகள். அவரின் அணுகுமுறையால் டெஸ்ட் கிரிக்கெட்டில் சாதகமான முடிவுகள் கிடைத்துக் கொண்டிருந்தாலும், ஷார்ட் ஃபார்மட்டில் எதிர்பார்த்த பலன்கள் இல்லை.

அட்டகாசமான தனிநபர்களைக் கொண்ட அணியாக இந்திய அணி இருந்ததே தவிர, ஒரு அட்டகாசமான அணியாக உருவெடுக்கவில்லை. 'கோலியால் அப்படி ஓர் அணியை ஒருங்கிணைக்க முடியவில்லை' எனச் சொல்வதே பொருத்தமாக இருக்கும். இதுதான் பலமான பிளேயர்கள் இருந்தும் முக்கியமான போட்டிகளில் நாம் தோல்வியைச் சந்திக்க மிக முக்கியமான காரணம்.



"விராட் கோலியை இருபது-20 கப்டன் பதவியிலிருந்து விலக வேண்டாம் என்று கேட்டுக்கொண்டோம். ஆனால், அவர் அதை ஏற்கவில்லை. இரண்டு ஒயிட் பால் ஃபார்மட்களுக்கு இரண்டு கப்டன்களைக் கொண்டிருக்க முடியாது. அதனால், ரோஹித்தையே இரண்டு ஃபார்மட்டுக்கும் கப்டனாக்க முடிவு செய்தோம். கோலியும் அதற்கு ஒப்புக்கொண்டார்" என கோலி நீக்கம் குறித்து விளக்கியுள்ளார் பி.சி.சி.ஐ.தலைவர் சௌரவ் கங்குலி.

இந்திய மகளிர் ஒருநாள் அணிக்கு மிதாலி ராஜும், இருபது-20 அணிக்கு ஹர்மன்ப்ரீத் கௌரும் கப்டனாக இருக்கிறார்கள். இதை 'கோலி திட்டமிட்டுக் கட்டம் கட்டப்படுகிறார்' என எடுத்துக் கொள்வதா, அல்லது 'மகளிர் அணிக்கு பி.சி.சி.ஐ. போதுமான கவனம் செலுத்துவதில்லை' என எடுத்துக் கொள்வதா? இன்னும் ஒன்றரை ஆண்டுகளில் 50 ஓவர் உலகக் கோப்பைத் தொடர் இந்தியாவில் நடக்கவிருக்கும் நிலையில் கோலியை நீக்கியிருப்பது நிச்சயம் அவரின் ஈகோ வைக் காயப் படுத்தியிருக்கும்.

தாய் மண்ணில் அணியைக் கோப்பையை நோக்கி வழிநடத்தத்தானே எந்தக் கப்டனும் விரும்பியிருப்பார். அதனால் அணி உருவாக்கத்தில் ஒரு சீனியராய் ரோஹித்துக்கு அவர் எவ்வளவு தூரம் ஒத்துழைப்பார் என்பது கேள்விக்குறியே.

டெஸ்ட் பார்மட்டிலும் கோலிக்கு முன்போல முழுச் சுதந்திரம் இருக்குமா, பயிற்சியாளர் டிராவிட்டுக்கும் கோலிக்குமான கெமிஸ்ட்ரி எப்படி இருக்கும் என்பதெல்லாமும் மில்லியன் டொலர் கேள்விகள்தான்.

ஏனெனில் கோலி களத்தில் ஆக்ரோஷமானவர், டிராவிட்டோ அப்படியே நேரெதிர். கடந்த காலத்தில் வெளிப்படையாகவே கோலியின் ஆட்டிட்யூட்டை விமர்சித்தவர் டிராவிட். கும்ப்ளே பயிற்சியாளராக இருந்த போது கடைசியாக விளையாடிய ஜெயந்த் யாதவ் இப்போது மீண்டும் அணிக்குள். இதுவே அணித் தேர்வில் கோலியின் ஆதிக்கம் குறைவதைக் காட்டுகிறது.

அதேசமயம், கோலி ஒரு பட்ஸ்மேனாக ஒரு நாள் போட்டிகளில் இனி நெருக்கடி இல்லாமல் விளையாடலாம். சதம் பற்றிய விமர்சனங்களைத் தோளில் சுமக்கத் தேவையில்லை. மறுபுறம் இருபது-20 அணியில் தன் இடத்தைத் தக்க வைக்க ஜூனியர் வீரர்களோடு போட்டி போட்டுத்தான் ஆக வேண்டும். அதனால், அடுத்த ஐ.பி.எல்.அவருக்கு மிக மிக முக்கியமான ஒன்று.

எப்படிப் பார்த்தாலும் இனி கோலியை தினமும் விமர்சனங்கள் துரத்தப் போவதில்லை. பழையபடி பட்டிங் ஃபார்மை மீட்டு, மீண்டும் கிங் கோலியாக, ஒரு பட்டராக அவர் கிரிக்கெட் உலகை ஆளலாம்.

அரசியல் தலையீடுகள் இல்லாவிட்டால் கிரிக்கெட்டில் அரசியல் தவிர்க்க முடியாததுதான். ஆனால் அது ஒரு தலைசிறந்த பட்ஸ்மேனை, ஒரு தலைசிறந்த அணியை பாதிக்கக்கூடாது என்பது தான் ஒவ்வொரு ரசிகனின் எதிர்பார்ப்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஜ்மகால்

மும்தாஜின் உடல் தாஜ் மகால் எழும்பும் வரை தற் காலிகமாக பர்ஹானின்பூரி லுள்ள புலாரா மகால் அரண் மனையின் ஜைனாபாத் தோட் டத்தில் புதைக்கப்பட்டது. ஆறு மாதங்கள் கழித்து தாஜ் மகாலின் ஆரம்பக் கட்டப் பணிகளின் போது அங்கி ருந்து தோண்டி எடுக்கப்பட்டு தற்போது இருக்கும் இடத்தில் வைக்கப்பட்டது.


பாரசீக கட்டடக்கலைஞர் உஸ்தாத் இசா என்பவரால் வடிவமைக்கப்பட்ட தாஜ்மகா லின் மற்ற பணிகளுக்காக வெவ்வேறு தேசங்களிலி ருந்து திறன் வாய்ந்த நிபுணர் கள் வரவழைக்கப்பட்டனர்.

வெனிஸ் நகர சிற்பி வெரோனியோ, துருக்கி கட்டடக் கலைஞர் உஸ்தாத் அஃபாண்டி, லாகூர் கலைஞர் உஸ்தாத் அஹமத், சுவர்களில் அழகாக எழுத்துக்களை பொறிக்கத் தெரிந்த அமான த்கான் பாரசீகத்திலிருந்தும் வரவழைக்கப்பட்டனர்.

அவர்தான் புனித குர்ஆன் வாசங் களை தாஜ்மகாலில் பொறித்ததோடு தனது கையெ ழுத்தையும் பதித்தவர். 42 ஏக் கர் நிலப்பரப்பில் உள்ள நந்த வனத்தில் அமையப் பெற்ற தாஜ்மகாலின் அடித்தளம் 186 அடி அகலும் அதே அளவு நீளமும் கொண்டது. 22 அடி உயரம் உடைய தாஜ்மாலின், தலைமைக் கட்டடக் கலைஞர் உஸ்தாத் அஹமத் வஹாரி ஆவார். பெர்சிய, முகலாய, இந்திய மற்றும் துருக்கி கட் டக்கலையின் கூட்டுக் கலவை யாக தாஜ்மகால் காணப்படு கிறது. இந்திய பண மதிப்பில் சுமார் 32 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருக்கிறது.

1932 இல் தொடங்கி 22 ஆண்டு காலம் நடைபெற்ற தாஜ்மகாலின் கட்டுமானப் பணிகள் 1658 இல் நிறைவு பெற்றது. அதற்குப் பிறகு ஐந்து ஆண்டுகள் மலர்ச்செடி கள் நிரம்பிய தோட்டம் அமை க்க செலவிடப்பட்டது. 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட பணி யாளர்கள், ஆயிரம் யானைகள் உழைப்பில் உருவானது தான் தாஜ்மகால்.

பஞ்சாப்பில் இருந்து சூரிய காந்தக் கற்கள், சீனாவில் இருந்து பச்சை மற்றும் ஸ்படி கக்கற்கள், ஆப்கானிலிருந்து நீலக்கற்களும், வைடூரியங்கள் எகிப்தில் இருந்தும், சிவப்பு மணிக்கற்கள் அருகிலுள்ள சிக்ரி மற்றும் தோல்பூர் ஆகிய இடங்களிலிருந்தும், அரேபியா விலிருந்து உயர் ரக வைரக் கற்களும், வெள்ளைக் கிளிஞ் சல்கள், முத்துச்சிப்பிகள் இந்தி யப் பெருங்கடலில் இருந்தும் எடுத்து வரப்பட்டு தாஜ்மகாலின் பளிங்குச் சுவர்களில் பதிக்கப் பட்டுள்ளன.


தாஜ்மகாலின் அழகிய தோற்றம்

தாஜ்மகாலின் நுழைவு வாயிலை 'தர்வாஜா' என்றும், சுற்றி அமைந்துள்ள தோட்ட த்தை 'பகீச்சா' என்றும், ஓய்வு இல்லத்தை 'வக்கார் கானா' என்றும் கல்லறை இருக்கும் இடத்தை 'ரவுசா' என்றும் அழைக்கிறார்கள்.

தாஜ்மகாலின் நான்கு புற மும் அமைக்கப்பட்டுள்ள கோபுரங்கள் 138 அடி உயரம் உடையவை. பார்த்துப் பார்த்து சலவைக் கற்களால் கட்டப் பட்ட வெண்ணிற தாஜ்மகா லின் எதிரிலேயே கறுப்புக் கற்களால் ஆன மற்றொரு மகாலை கட்ட வேண்டும் என ஷாஜகான் ஆசைப்பட்டார்.

ஆனால் அவருக்குப்பின் அதிரடியாக ஆட்சியைப் பிடி த்த ஷாஜகானின் மூன்றாவது மகன் அவுரங்கசீப் அவரது ஆசைக்குத் தடை போட்டு அவரையும் சிறையில் அடைத் தார்.

ஷாஜஹானின் விருப்பப்படி தாஜ்மகாலை கண் விழித்தால் பார்க்கும் தூரத்தில் உள்ள மாளிகையில் அவர் காவலில் வைக்கப்பட்டார்.

(தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2472

### பியாறோ

உங்க பையன் எங்ககிட்டதான் இருக்கான் ஒரு 28 ஆயிரம் ருபா குடுத்திட்டு கூட்டிட்டுப் போங்க



இருடா பொலிஸ்கிட்ட கம்ளைன்ட் குடுக்கிறேன்



நாங்க பொலிஸ் தான் பேசுறோம் ஹெல்மெட் , லைசென்ஸ், இன்சூரன்ஸ் எதுவும் இல்லாம வண்டி ஓட்டியிருக்கான் வந்து Fine கட்டிட்டு கூட்டிட்டுப்போங்க

### சுகந்தன்



காதலி : நம் காதலை ஏன் அப்பாகிட்ட சொல்ல அவசரப்படுத்துறீங்க?



காதலன் : அப்பதான் உனக்கு வேற இடத்தில் சீக்கிரம் மாப்பிள்ளை பார்ப்பார்

### ரூபினி

திருமணத்தில் இணைவதும் இராணுவத்தில் இணைவதும் ஒன்று இமைப்பொழுதும் தாக்குதலை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்



### சௌமியன்



டேய் சீக்கிரம் எடுடா இல்லைன்னா உங்க அம்மா பாத்தா என்னத்தான் திட்டுவா நாய் கூட சேர்ந்தா நாய் புத்திதான் வரும்னு

### நிசாந்தி

கோபமா பதில் சொல்லக்கூடாதுன்னு அட்வைஸ் பண்றாங்க



ஆனால் கோபம் வாற மாதிரி கேள்வி கேட்கக் கூடாதுன்னு அவங்க ஏன் இன்னும் கத்துக்கல?

### புஸ்பா

இது ஒரு கலுசடை, தேடும் போது கிடைக்காது



தேவையில்லாத நேரத்தில கண்ணுக்கு முன்னாடியே சுத்திக்கிட்டு இருக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 270

## உங்கள் சந்தேகங்கள்

**எனது வயது 51, ஒன்பது மாதங்களுக்கு முன் RBS செய்தபோது 209mg/dl ஆக இருந்தது. HbA1C டெஸ்ட் 7.7 ஆக இருந்தது. அன்றிலிருந்து சுமார் 6 மாதங்கள் நான் கடுமையான உடற்பயிற்சி செய்து வந்தேன். ஒவ்வொரு கிழமையும் இரத்தப் பரிசோதனை செய்து வந்தேன். FBS சராசரியாக 121 இல் இருந்தது. மீண்டும் HbA1C டெஸ்ட் செய்த போது 6.7 ஆக இருந்தது. எனது தற்போதைய உடல் நிறை 60 kg, உயரம் 170cm. எனக்கு உண்மையில் சலரோக நோய் இருக்கிறதா? எனக்கு இது சம்பந்தமான வைத்திய ஆலோசனை தருவீர்களா?**

முதலில் உங்களுடைய நிலை சலரோக நிலையா? அல்லது சலரோகத்திற்கு முந்திய நிலையா? எனப்பார்ப்போம். சலரோகத்திற்கு முந்திய நிலையின் போது சாப்பாட்டிற்கு முன்னராக குருதிக் குளுக்கோசின் அளவு 100 mg/dl -125 mg/dl இற்கும் இடையிலும் HbA1C ஆனது 5.7 - 6.4 இற்கும் இடையிலும் இருக்கும் HbA1C ஆனது 6.5 இற்கு மேற்பட்டிருப்பின் அது சலரோகநோய் உள்ளதாக கொள்ளப்படும். உங்களிற்கு சலரோக நோய் உள்ளது. Metformin என்ற மாத்திரை தொடங்க வேண்டும்.

உங்களுடைய தற்போதைய உடற்திணிவுச் சுட்டியானது 22.49 $kgm^{-2}$ ஆக உள்ளது. ஒருவருடைய உடற்திணிவுச் சுட்டியானது 18.5 - 23 எனும் அளவினுள் இருக்கலாம். எனவே உங்களுடைய நிறை சாதாரண அளவிலேயே உள்ளது. எனவே நீங்கள் வேகமான நடை, ஓடுதல், மிதிவண்டி செலுத்துதல், நீந்துதல் போன்ற காற்றுப் பயிற்சியினை நாளொன்றிற்கு 30 நிமிடங்கள் செய்வது சிறந்தது. அத்துடன் உணவுக் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிப்பதன் மூலம் உங்களின் ஆரோக்கியத்தைப் பேண முடியும்.

**எனக்கு வயது 30 நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளேன், எனது உடல் மெலிவடைந்து போகின்றது, நான் எவ்வளவு காலம் வாழலாம்?**

நீரிழிவுநோய் ஏற்பட்டுள்ளது என்பதற்காக மனமுடைந்து போக வேண்டிய அவசியமில்லை. இளவயதில் நீரிழிவு ஏற்படுவது தற்போது பொதுவான ஒரு விடயமே. இதனைப் பூரணமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும், இதனால் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்கவும் பலவிதமான நல்ல மருத்துவ முறைகள் கண்டறிப்பட்டுள்ளன.

சரியான மருத்துவ ஆலோசனையைக் கடைப்பிடித்து இளவயதில் கண்டறியப்பட்ட பல நோயாளர்கள் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றார்கள். எனவே நீங்களும் மன ஊக்கத்துடன், உங்களின் வைத்திய ஆலோசனைகளுக்கமைய நடந்து கொண்டால் பாரதூரமான தாக்கங்கள் ஏதுமின்றி நீண்டகாலம் சாதாரண வாழ்க்கை வாழ முடியும்.

**எனக்கு 45 வயது. மலச்சிக்கல் உள்ளது. இதனால் உடலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு சரியான தீர்வு சொல்லுங்கள்.**

மலச்சிக்கல் எனப்படுவது ஒரு வாரத்தில் 03 தடவைகளுக்கு குறைவாக மலம்களித்தல் அல்லது மலத்தின் கடினத்தன்மை அல்லது மலம் கழித்தலிலுள்ள கடினத்தன்மை அல்லது பூரணமாக மலம் கழிக்கவில்லை என்ற உணர்வு என வரையறை செய்யலாம்.

பொதுவாக மலச்சிக்கலானது முறையற்ற உணவுப் பழக்கங்கள், நீர் அருந்துதல் போதாமை, ஒழுங்கற்ற முறையில் மலங்கழிக்க செல்லுதல் போன்றவற்றினால் ஏற்படலாம். இவற்றை விட சில மருத்துவ காரணங்களாலும் மலச்சிக்கல் ஏற்படலாம். உதாரணமாக தைரொக்சின் குறைபாடு, வேறு சில மாத்திரைகள் பயன்படுத்துதல், வேறு குடல் சம்பந்தமான நோய்கள் போன்றவையாகும்.

எனவே நீங்கள் மலச்சிக்கலை தவிர்ப்பதற்கு ஒவ்வொரு நாளும் குறைந்தது 2 லீற்றர் நீராவது அருந்த வேண்டும். உங்கள் உணவில் அதிகளவு நார்ப்பொருள் உள்ள உணவுகளை, பழங்கள், மரக்கறிகளை அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றைவிட நீங்கள் தினமும் குறித்த ஒரே நேரத்தில் மலங்கழிக்க செல்ல உங்களை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்துவர உங்கள் மலச்சிக்கல் நீங்கும். இவற்றைவிட நீங்கள் வேறு ஏதாவது மலச்சிக்கலை ஏற்படுத்தக்கூடிய மாத்திரைகளை பயன்படுத்தினால் அவை பற்றி உங்கள் வைத்தியரிடம் கேட்டு அவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள். இவற்றுக்கு உங்கள் மலச்சிக்கல் குணமடையாது விடின் வைத்தியரை நாடி உங்களிற்கு மேற்குறிப்பிட்டது போன்று வேறு ஏதாவது காரணங்கள் உண்டா? என்று அறிந்து அவற்றிற்கு உரிய சிகிச்சையை பெற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் உடலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது என குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் அவை என்ன என குறிப்பிடப் படவில்லை. உங்களிற்கு மலச்சிக்கலுடன் நிறை அதிகரித்தல், பசியின்மை, குளிரை தாங்க முடியாமை, தோல் உலர்வடைந்து காணப்படல், பகலில் நித்திரைத் தூக்கம், தலைமுடி உதிர்த்தல் போன்றன காணப்படின் இவை தைரொயிட் குறைபாட்டிற்குரிய அறிகுறிகளாகும். எனவே நீங்கள் வைத்தியரை நாடி அதற்கு உரிய சிகிச்சை பெற்றுக் கொள்வது சிறந்தது.

**வயது 32, ஆண் தற்போது தான் திருமணம் முடித்தேன். ஆனால் எனக்கு நீரிழிவு நோய் உள்ளது. இதனால் குழந்தை பெறுவதில் சிக்கல் இருக்குமா?**

நீரிழிவு நோயை தகுந்த முறையில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் ஏனைய சுகாதரப் பிரச்சினைகள் ஏற்படுவதைக் குறைக்க முடிவதைப் போலவே, பாலியல் சம்பந்தமான பிரச்சினைகளையும் பெருமளவில் தவிர்த்துக் கொள்ள முடியும். எனவே குழந்தைகள் பெற்றுக் கொள்வதிலும் பிரச்சினைகள் இருக்கப் போவதில்லை.

நீங்கள் இது சம்பந்தமாக மனக் குழப்பம் அடையத் தேவையில்லை. நீரிழிவை மருத்துவ ஆலோசனைகளுக்கமைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் அநாவசிய பிரச்சினைகளைத் தவித்துக் கொள்ளலாம்.

**நான் 32 வயதுடைய பெண். எனது நிறை 75 Kg, உயரம் 157cm. எனக்கு முடி உதிர்தல் பிரச்சினைக்காக வைத்தியரிடம் ஆலோசனை பெற்ற போது FBS -101.9mg/dl ஆக இருந்தது. அதனை ஒரு வைத்தியர் நீரிழிவு இல்லை எனவும் இன்னொரு வைத்தியர் நீரிழிவு முன்னிலை (prediabetic) எனவும் கூறினர். நீரிழிவு தொடர்பான எனது உடல் நிலையைத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.**

உங்களது உடற் திணிவு சுட்டி 30.42 $Kgm^{-2}$. சாதாரணமான உடற் திணிவு சுட்டி 18-23$Kgm^{-2}$) என்பதால் உங்களது உடல் நிறையை நியம மட்டத்தில் பேணுவது அவசியமானதாகும். இரு வைத்தியர்களும் சரியாகத்தான் கூறியிருக்கிறார்கள். Prediabetic முன்னிலை என்பது FBS பெறுமானம் 100 -126 mg/dl இருக்கும் நிலையாகும். நீங்கள் உங்களது உடல் நிறையை நியம மட்டத்தில் பேணுவதனூடாக அதாவது உணவுக்கட்டுப்பாடு, போதிய உடற்பயிற்சி என்பவற்றின் மூலம் உங்களுக்கு எதிர்காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படுவதையும் நீரிழிவினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களையும் தாமதிக்க முடியும். நீங்கள் பேண வேண்டிய உடல் நிறை 57-54 Kg ஆகும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

Supported by the · Coordinated by · Implemented by · Local Project Partner · cooperation partner

## How To Market Your Food Products Successfully

Tuesday, 21 December 2021 Time: 02.00pm - 03.00pm SLT

Food packaging, labelling, and certification play an important role in ensuring the success of your company especially in the international market. Find out about the current trends, rules and regulations that affect your industry and business. You will gain first hand information from the participating experts to ensure your food products meet the requirements of EU regulators and customers

Speakers:

Mr. Vinayakarasa Thirumalavan
MSc, BSc(Spcl),
Food Safety Specialist, CCIY



Mr. Malintha Gajanayake
Head of Corporate Affairs & Export Promotions
Delegation of German Industry and Commerce in Sri Lanka
BBA(Hon). UK.



Mr.Kanagasabathy Nanthakumaran
FCMA (UK),
CGMA, MBA(Aus)
Consultant - Business Development



CCIY is inviting you to a scheduled
Zoom meeting

Topic:
Webinar on Food Packaging, Labelling & Certification.

Time: Dec 21, 2021
02:00 PM SLT

Join Zoom Meeting
https://us02web.zoom.us/-j/83618607973?pwd=TDdxNHNrSll6UzdG-Mzgyb3FydHhldz09

Meeting ID: 836 1860 7973
Passcode : 026945

Language : English & Tamil

Benefits for Companies in the Northern Region that comply with these concepts

For Registration
Chamber of Commerce & Industries of Yarlpanam.(CCIY)
No.55, Kachcheri Nallur Road, Jaffna.
Manager Admin
+94 21 222 6609, 070 366 3604
info@cciy.lk

Take aways will be:

- Latest trends in the market for packaging, labelling and certification with a stronger focus on Europe.
- Market competitiveness of innovative packaging and corresponding requirements labels and necessary certifications.

1st Edition of the CCIY Webinar Serie

organized by : Chamber of Commerce & Industries of Yarlpanam(CCIY)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org